## பாடம் - 01

## இஸ்ரயேல் இறைவாக்கினர்

1. இறைவாக்கினர் எனப்படுவோர் யார்?
   1. இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்
   2. இறைவனுக்காகப் பேசுபவர்கள்
   3. இறைவனின் எண்ணங்களை, திட்டங்களை மக்களுக்கு அறிவிப்பவர்கள்
   4. இறைவன் ஒருவரே என நிலைநாட்டினர்.

2. இறைவாக்கினருக்கு வழங்கப்பட்ட பெயர் ?

   நபி

3. “நபி” என்ற எபிரேயச் சொல்லின் பொருள் யாது?

   இறை சித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பர்

4. ‘‘நபி’’ என்ற சொல்லை கிரேக்க மொழியில் எவ்வாறு அழைப்பர்?

   “பிறொவ்படெஸ்ட்’

5. “பிறொவ்படெஸ்ட்’’ என்பதன் பொருள்?

   இறைவனுக்காக பேசுபவர்கள்

6. இன்று இறைவனின் குரலை நாம் இனங்கான எமக்கு உதவுபவர்கள் யார்?
   1. குருக்கள்
   2. துறவிகள்
   3. பெற்றோர்
   4. ஆசிரியர்கள்

7. இறைவாக்கினரை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

   2
   1. இறைவாக்குரைப்போர் (எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்)
   2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்

8. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் யார்?

   1. நாத்தான் 2. எலியா 3. எலிசா 4. குல்தா 5. அஹியா 6. மீக்சாயா

9. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் நூல்கள் எழுதினார்களா?

   இல்லை

10. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் பற்றி கூறும் நூல்கள் எவை?

    1. சாமுவேல் 2. அரசர்கள்

11. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

    02
    1. பெரிய இறைவாக்கினர்
    2. சிறிய இறைவாக்கினர்

12. பெரிய இறைவாக்கினர் யார்?

    1. எசாயா 2. எரேமியா 3. எசேக்கியேல்

13. சிறிய இறைவாக்கினர் யார்?

    1. ஓசேயா 2. யோவேல் 3. ஆமோஸ் 4. ஓபதியா 5. யோனா 6. மீக்கா 7. நாகூம் 8. ஆபக்கூக்கு 9. செப்பனியா 10. ஆகாய் 11. செக்கரியா 12. மலாக்கி

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

**14.** திருமுழுக்கின் மூலம் இறைவாக்கினர்களாக அருட்பொழிவு செய்யப்பட்டுள்ள எம்மிடம் கொடுக்கப்பட்ட கடமைகள் எவை?

1. உண்மையுள்ளவர்களாக செயலாற்றுதல்.
2. தவறான வழியில் செயற்படுபவர்களை சரியான வழியில் கொண்டு வரல்.
3. உண்மையை மறைக்கின்றவர்களுக்குச் சவாலாக இருத்தல்
4. சரியானதை செய்வதற்குப் பிறருக்கு வழிகாட்டுதல்
5. திருவிவிலியத்தில் உள்ள செய்தியினை பிறருக்கு அறிவித்தல்.

## பாடம் - 2
## இறைவாக்குரைப்போர்

**சிறுகுறிப்பு**

**1. இறைவாக்கினர் நாத்தான்**

தாவீது அரசன் உரியாவின் மனைவி பத்சேபாவுடன் தவறான முறையில் உறவு கொண்டிருந்தார். ஆதனை இறைவாக்கினர் நாத்தான் ஆட்டுக்குட்டி உவமை முலம் அவரது தவறை உணர்த்தினார். தன் தவறை உணர்ந்த தாவீது அரசன் மனம் திரும்பினார்.

**2.** இறைவாக்கினர் நாத்தான் கூறிய உவமையை எழுதுக?
செல்வன் ஒருவனிடம் பல ஆடு, மாடுகள் இருந்தன. ஆனால் ஏழை ஒருவன் ஓர் ஆட்டுக் குட்டி ஒன்றை வளர்த்தான். ஒரு நாள் ஒருவர் செல்வனிடம் வந்தார். அவருக்கு விருந்து வைக்க செல்வன் அந்த ஏழையின் ஆட்டுக்குட்டியை கொன்று கறி சமைத்து கொடுத்தான்.

**3.** தாவீது அரசனை மனம் திருப்பிய இறைவாக்கனர்?
இறைவாக்கினர் நாத்தான்

**4. இறைவாக்கினர் எலியா**

பங்சகாலத்தில் இறைவாக்கினர் எலியா கெரீத்து ஓடையருகில் வாழ்ந்து வந்தார். காகங்கள் அவருக்கு அப்பமும் இறைச்சியும் கொண்ட வந்து கொடுத்தன. பின்னர் இறைவாக்கினர் எலியா சரிபாத்து என்ற ஊரில் வாழ்ந்த கைம்பெண்ணின் வீட்டிற்குச் சென்றார். அப் பெண் தன்னிடம் இருந்த கையளவு மாவையும், சிறிதளவு எண்ணையையும் கொண்டு அவருக்கு உணவு கொடுத்தார். அதனால் அங்கு ஒரு புதுமை நிகழ்தது. அப் பெண்ணின் பாத்திரத்தில் இருந்த மாவைவும், எண்ணையும் பஞ்ச காலம் முடியும் வரை தீந்து போகவில்லை.

**5.** இறை பராமரிப்பு என்றால் என்ன?
துன்பமான நேரங்களில் இறைவன் வெவ்வேறு ஆட்கள் வழியாக உதவுதல் இறைபராமரிப்பாகும்.

**6.** இறைவாக்கினர் எலியாவிற்கு பஞ்ச காலத்தில் உதவியவர்?
சரிபாத்து என்ற ஊரில் வாழ்ந்த கைம்பெண்

MRS.STELLA NITHIANAYAGAM (B.A(HONS)

7. உண்மையான இறைவன் யார் என எண்பிக்க எலியா இறைவாக்கினர் செய்த செயல் யாது?
கார்மேல் மலை மீது எலியா இறைவாக்கினரும். பாகால் என்ற வேறு தெய்வத்தின் பலிகள் ஆயத்தம் செய்யப்பட்டது. எலியா இறைவாக்கினர் வைத்த பலிப்பொருள் மீது கடவுள் நெருப்பு மூழச் செய்து எரிபலியை ஏற்றுக் கொண்டார். ஆனால் பாகால் என்ற தெய்வத்திற்கு படைத்த பலிப்பொருள் மீது எதுவும் நடக்கவில்லை. இதனால் எலியா இறைவாக்கினரின் கடவுளே உண்மையான இறைவன் என்பது எண்பிக்கப்பட்டது.

8. உண்மையான இறைவன் யார் என எண்பிக்க எலியா இறைவாக்கினர் பலி செலுத்தியது?
கார்மேல் மலையில்

9. எலியா இறைவாக்கினர் வைத்த பலிப்பொருளை இறைவன் ஏற்றுக்கொண்டு தாமே உண்மையான இறைவன் என்பதை எண்பித்ததன் அடையாளமாக விளங்குவது?
பலிப்பொருள் மீது நெருப்பு மூழச் செய்தது

10. கார்மேல் மலைமீது எரிபலி நிறைவுற்றதும் பஞ்சம் முடிவடைந்தது என்பதை காட்டும் அடையாளம்?
மழை பெய்தமை

11. உண்மையான இறைவன் யார் என எண்பிக்க எலியா இறைவாக்கினர் செலுத்திய பலி?
எரிபலி

12. இறைபாராமரிப்பை பெற நாம் செய்ய வேண்டியது?
இறைவனில் நம்பிக்கை வைத்து செபிக்க வேண்டும்

13. **இறைவாக்கினர் எலிசா**
இறைவாக்கினர் எலிசா பன்னிரெண்டு ஏர் மாடு பூட்டி உழுது கொண்டிருக்ககும் போது எலியா இறைவாக்கினர் தனது மேலாடையை இறைவாக்கினர் எலிசா மீது போடவே இறைவாக்கினர் எலிசா, எலியா இறைவாக்கினரை பின்பற்றி இறைவாக்குரைக்கும் பணியில் ஈடுபட்டார். ஒரு முறை சிரியா நாட்டு படைத்தளபதி நாமான் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் அன்னிய தெய்வங்களை மன்றாடிய போதும் குணமடையவில்லை. ஆனால் இறைவாக்கினர் எலிசா அவரை குணப்படுத்தி எங்கள் இறைவன் தான் உண்மையான இறைவன் என எண்பித்தார்.

14. படைத்தளபதி நாமானை குணப்படுத்திய இறைவாக்கினர்?
இறைவாக்கினர் எலிசா

15. இறைவாக்கினர் எலியா, இறைவாக்கினர் எலிசாவை இறைவாக்குரைக்க அழைத்தவிதம்?
எலிசா மீது தனது மேலாடையை போட்டு

16. நீர் உமது வாழ்வில் இறை பாராமரிப்பை உணர்ந்த கொண்ட சந்தர்ப்பம் 5 தருக?
   1. பகல் முழுவதும் எந்த ஆபத்தும் வராமல் இருக்கின்ற போது.
   2. இரவு முழுவதும் எந்த ஆபத்தும் வராமல் இருக்கின்ற போது.
   3. வீதியைக் கடக்கும் போது
   4. உணவு இல்லாமல் இருக்கும் போது வேறு யாரும் உணவு தரும் போது.
   5. பாடசாலைக்கு வரும்போதும், போகும் போதும்

17. செபம் பற்றி கருத்துக்கள் தருக.
   1. செபத்தினால் நாம் குணம் பெறுவதை அனுபவிக்கலாம்.
   2. எமது வாழ்க்கைக்குச் செபம் ஒரு பலம் வாய்ந்த சக்தியாகும்.
   3. செபமின்றி வாழ்க்கையில் வெற்றியீட்ட இயலாது.
   4. செபம் நாம் இறைவனுடன் உரையாட உதவுகின்றது.
   5. செபம், தனிச்செபம், குழுச் செபம் என வகைப்படுகின்றது

MRS STELLA NITHIANAYAGAM (B.A(HONS))

## பாடம் - 3
## பெரிய இறைவாக்கினர்

1. பெரிய இறைவாக்கினர்கள் யார்?
    1. எசாயா
    2. ஏரேமியா
    3. எசேக்கியேல்
2. இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பை சுருக்கமாக தருக?

   எசாயா இறைவாக்கினர் காட்சி ஒன்று கண்டார். தான் ஜெருசலேம் ஆலயத்தில் இருப்பதாகவும், இறைவன் உயரமான ஒரு அரியணைமீது அமர்ந்திருப்பதாகவும் அவருடைய தொங்கலாடை கோவிலை நிரப்பி இருப்பதாகவும், அங்கு ஆறு இறக்கைகள் கொண்ட சேரான்பிகள் (வானதூதர்) அவருக்குபணிபுரிய அவரைச் சூழ்ந்து நிற்பதாகவும் அவை ஆண்டவரை பார்க்க முடியாது தமது இரண்டு இறக்கையால் தம் முகத்தை மூடிக் கொண்டும் மற்ற இரண்டு இறக்கைகளால் உடலை மறைத்துக் கொண்டு வேறு இரண்டு இறக்கைகளால் பறந்தன. சேராபின்களில் ஒன்று "படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர்" என பாடின. கோவில் முழுவதும் தூபத்தின் புகையால் நிறைந்திருந்தன. இதைக் கண்ட எசாயா இறைவாக்கினர் **"ஐயோ நான் அழிந்தேன் ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான் படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே"** என்றார். உடனே ஆண்டவர் வானதூதர் வழியாக நெருப்பு தனலை குறட்டால் எடுத்து அவரின் வாயில் வைத்து **"இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது, உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது உன் பாவம் மன்னிக்கப்பட்டது"** என்றார். பின் இறைவன் எசாயாவிடம் எனது பணியைச் செய்ய யாரை அனுப்புவேன் நமது பணிக்காக யார் போவார் என்றார். அதற்கு எசாயா இறைவாக்கினர் நான் என் தலைவரின் குரலைக் கேட்டேன். **'இதோ நானிருக்கின்றேன் அடியேனை அனுப்பும்'** என்று பதிலளித்தனர்.
3. எசாயா என்பதன் பொருள் யாது?

   யாவே மீட்பராயிருக்கிறார்
4. எசாயா எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்?

   8ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்
5. எசாயா இறைவாக்கினர் எங்கு பிறந்தார்?

   எருசலேமில்
6. எசாயா இறைவாக்கினர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

   யூத நாட்டை
7. எசாயாவின் தந்தை பெயர் யாது?

   ஆமோஸ்
8. எசாயா இறைவாக்கினர் எத்தனை ஆண்டுகள் பணி செய்தார்?

   40
9. எசாயா இறைவாக்கினர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

   காட்சி மூலம்
10. "ஐயோ நான் அழிந்தேன், ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்" எனக் கூறியவர் யார்?

    எசாயா இறைவாக்கினர்

MRS.STELLA NITHIANAVACAM B.A(HONS)

**11.** "இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்" என்ற கூற்றோடு தொடர்புடையவர் யார்?
எசாயா இறைவாக்கினரும் இறைவனும்

**12.** எசாயா இறைவாக்கினர் கண்ட காட்சியின் மூலம் நீர் உணர்ந்து கொண்டவை எவை?

1. கடவுள் பரிசுத்தமானவர்
2. கடவுள் ஆலயங்களில் பிரசன்னமாக இருக்கின்றார்
3. இறைவன் வாழும் இல்லமாகிய ஆலயத்தில் நாம் பக்தி பற்றுதலுடன் நடந்து கொள்ள வேண்டும்.
4. இறைவாக்கினர்கள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள்.

**13. யாரால் யாருக்குக் கூறப்பட்டது.**

1."ஐயோ நான் அழிந்தேன், ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான், படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே".
எசாயா இறைவாக்கினரால் தனக்கு தானே

2."இதோ நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது, உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது.
செராபீனால் எசாயாவுக்கு

**14.** ஆலயத்தின் புனித தன்மையை பாதுகாக்க நீர் செய்யக் கூடிய 5 செயல்கள் தருக?

1. ஆலயத்தினுள் நுழையும் போத இரு முழங்கால்களையும் மடித்து சிரம் தாழ்த்தி நற்கரணைநாதரை ஆராதிக்க வேண்டும்.
2. ஆலயத்தினுள் இங்கும் அங்கும் ஓடித் திரியக் கூடாது.
3. ஆலயத்தினுள் சத்தம் செய்தல், கதைத்தல் கூடாது.
4. ஆலயத்தினுள் உணவு உண்ணல் கூடாது.
5. ஆலயத்தை சுத்தமாக வைத்திருத்தல்.

**15.** இறைவாக்கினர் போன்று தலைமைத்துவப் பண்புகள நாம் வளர்த்துக் கொள்ள செய்ய வேண்டிய எவை?

1. ஆன்மீகச் செயல்களில் வளர்தல்.
2. சாவால்களை எதிர்கொள்ளல்.
3. பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளல்.
4. குழுவாகச் செயற்படுதல்.
5. இயேசுவுக்காகச் சாட்சி பகர்தல்.
6. ஏம்மை யணிவாழ்வுக்கு அர்ப்பணித்தல்.

**16.** உமது பங்கில் உம்மால் செய்யக் கூடிய கணிகள் 5 தருக?

1. ஆலயத்தை துப்பரவாக வைத்திருக்க உதவுதல்.
2. பாடகர் குழுவில் இணைதல்.
3. பீடப்பணியாளராக உதவுதல்.
4. திருப்பாலத்துவ சபையில் இணைதல்.
5. வழிபாடுகளின் போது உதவுதல்.

MRS STELLA JITHTANAYAGAM (B.A(HONS)

**17.** எரேமியா இறைவாக்கினரின் அழைப்பை சுருக்கமாக தருக?

இவர் உரையாடல் மூலமாக இறைவனின் அழைப்பைப் பெற்றார். ஆண்டவர் எரேமியா இறைவாக்கினரை நோக்கி **"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்னே உன்னை திருநிலைப்படுத்தினேன், மக்கள் இனங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்"** என்றார். இதைக் கேட்ட எரேமியா **" என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாது சிறு பிள்ளை தானே"** என்றார். அதற்கு ஆண்டவர் நான் உன்னோடு இருக்கின்றேன் எனக் கூறி அவரைத் திடப்படுத்தி யாரிடம் எல்லாம் நான் உன்னை அனுப்புகிறேனோ அவர்களிடம் சென்று நான் சொல்வதை அவர்களுக்குச் சொல் என்றார். மேலும் இறைவன் **"இதோ பார் என் சொற்களை உன் வாயில் தைத்துள்ளேன் பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் இன்று நான் உன்னை மக்கள் இனங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாகவும் ஏற்படுத்தியுள்ளேன் என்றார். அத்துடன் "நீயோ உன் இடையை வரிந்து கட்டிக்கொள் புறப்படு நான் கட்டளையிடும் அனைத்தையும் அவர்களிடம் சொல் அவர்கள் முன் கலக்கமுறாதே ஏனெனில் உன்னை விடுவிக்கநான் உன்னோடு இருக்கின்றேன்"** என்றார்.

**18.** "எரேமியா" என்பதன் பொருள் யாது?

யாவே உயர்த்துகின்றார்

**19.** எரேமியா பிறந்த இடம் யாது?

அனத்தோப்பு என்ற சிறிய கிராமத்தில்

**20.** எரேமியா எசாயா எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்?

7 - 6 ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்?

**21.** எரேமியா இறைவனால் அழைக்கப்பட்ட போது அவருக்கு வயது?

25

**22.** இறைவாக்கினர் எரேமியாவின் அழைப்பு எமக்கு தரும் கற்பித்தல் யாது?

எரேமியா இறைவாக்கினர் போன்று நாமும் பலவீனங்கள் மத்தியில் இறைவன் எமக்கு தரும் கடமைகள் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்பதை.

**23.** இறைவாக்கினர் எரேமியாவின் தந்தையின் பெயர்?

ஹில்கியா

**24.** எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பை சுருக்கமாக தருக?

எசேக்கியேல் இறைவாக்கினர் காட்சி மூலம் இறைவனால் அழைக்கப்பட்டார். இவரது காட்சி பபிலோனிய புராதனக் கதைகளை தழுவியதாக உள்ளது. இக்காட்சியில் பபிலோனிய தெய்வங்களான நாபு, நேர்கல், மார்டுக், நிரிப், பரிவேயை தூக்கி வருவதாக காண்கிறார். அக்காட்சியை கண்ட எசேக்கியேல் அச்சத்தால் மயங்கி முகங்குப்புற விழுகின்றார். ஆண்டவர் அவரை ஆவியால் நிரப்பி எழுந்து நிற்க கட்டளையிடுகின்றார். பின் ஆண்டவர் எசேக்கியேலை நோக்கி **"மானிடா நான் உனக்குத் தருகின்ற இச் சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு"** என்றார். எசேக்கியேலும் அதை உண்டார். அது தேன் போல் இனித்தது. பின் இறைவன் அவருக்கு இறைவாக்கு உரைக்கும் பணியின் பொறுப்பை ஒப்படைத்து, **"மானிடா எனக்கெதிராக கிளர்ச்சி செய்யும் மக்களிடம் நான் என்னை அனுப்புகிறேன். வுன் கண்ணும் கடின இதயமும் கொண்ட அம்மக்களிடம் நான் உன்னை அனுப்புகின்றேன். நீ அவர்களிடம் போய் தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே என்று சொல், நீ அவர்களுக்கு அஞ்சாதே"** என்றார்.

MRS.SELLANITHILANAYAGAM (B.A(HONS))

**25.** “எசேக்கியேல்” என்பதன் பொருள் யாது?

இறைவன் (யாவே) பலப்படுத்துகிறார்.

**26.** “எசேக்கியேல்” இறைவாக்கினர் தந்தை பெயர் என்ன?

பூசி

**27.** “எசேக்கியேல்” இறைவாக்கினர் எந்த நாட்டில் வசித்த போது இறைவாக்கினரால் அழைக்கப்பட்டார்? பபிலோனியாவில் தோல்

**28.** எசேக்கியேல் எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்?

6ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்

**29.** எசேக்கியேல் இறைவாக்கினர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?

சாதோக்கின் வழிவந்த குருகுலத்தைச் சார்ந்தவர்.

**30.** இறைவன் ஓட்டுச்சுருளை யாருக்கு உண்ணக் கொடுத்தார்?

எசேக்கியேல் இறைவாக்கினருக்கு

**31.** எசேக்கியேல் இறைவாக்கினர் கண்ட காட்சி மூலம் உணர்த்தப்படும் செய்தி யாது?

1. யாவே ஒருவரே இறைவன்
2. யாவே ஒருவரே இயற்கையில் இருந்து வேறுபட்டவர்.
3. இறைவன் மேன்மையானவர்.
4. காட்சியில் கண்ட நெருப்பும், தீப்பிழம்பும் இறைவனின் தெய்வீகத் தன்மையையும் தூய்மையையும் உணர்த்துகின்றது.

**32.** திருமுழுக்கின் மூலம் இறைவாக்கும் பணிக்கு அழைக்கப்பட்ட உமது கடமைகள் பொறுப்புக்கள் 5 தருக?

1. இறைவாக்குப்பணி கடவுளிடமிருந்து வந்த ஒரு பெருங்கொடை அதை ஏற்று, இறைவன் என் மூலமாக மக்களுக்கு சொல்ல விரும்பியதை அறிந்து சொல்லுவேன்.
2. பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களைப் போல் ஒழுக்க சீலராக வாழிவேன்.
3. நற்செய்தியை எல்லோர் மத்தியிலும் பரப்புவேன்
4. கிறிஸ்துவின் போதனைகளுக்கு ஏற்ப முன்மாதிகையாளனாக வாழ்வேன்.
5. சமூகத்தில் நீதியை நிலை நாட்ட உழைப்பேன்.

## பாடம் - 4
## சிறிய இறைவாக்கினர்

**1. சிறுகுறிப்பு**

**இறைவாக்கினர் ஆமோஸ்**

இவர் கி.மு. 8ம் நூற்றாண்டிலே யூதேயாவில் தெக்கோவாவில் வாழ்ந்தவர். இவர் ஓர் ஆத்திக்காய் பயர் செய்த விவசாயி. இவர் வாழ்ந்த கால கட்டத்தில் இஸ்ரயேல் நாடு நேர்மையின்மை, தந்திரம் என்பவற்றில் நிறைந்த விளங்கயது. மக்களின் இவ் நடத்தையை பயமின்றி எச்சரித்தார். சமூகத்தில் நீதியை நிலை நாட்ட உழைத்தார். இதனால் “சமூக நீதியின்” இறைவாக்கினர் எனஅழைக்கப்பட்டார்.

**2. ஒசேயா இறைவாக்கினர்**

இவர் கி.மு. 8ம் நூற்றாண்டிலே வாழந்தவர். இவரின் திருமண வாழ்கையே இறைவாக்க செய்தியாக இருந்தது. இவர் கோமோர் என்ற திருமணம் செய்தார். ஆனால் அப் பெண் வேறு ஆண்கக் பின் சென்றார். ஆனால் ஒசேயா இறைவாக்கினர் அவரை அழைத்து வந்தார். அதே போலத் தான் இஸ்ராயேல் மக்களும் இறைவனை மறந்த வேறு தெய்வங்களை வழிப்பட்டனர். ஒசேயா இறைவாக்கினர் அது பிழை எனக் கூறி மக்களை இறைவனிடம் அழைத்து வந்தார்.

MRS STELLA NITHIANANAYAGAM (B.A(HONS)

3. **யோனா இறைவாக்கினர்**

இவர் கி.மு. 8ம் நூற்றாண்டிலே வாழந்தவர். நினிவே மக்கள் பாவத்தில் பெருகி இறைவனை மறந்த வாழ்ந்தனர். வேர்களை மனம் மாறும்படி சொல்லும்படி இறைவன் யோனாவுக்கு கூறினார். ஆனால் யோனா இறைவாக்கினர் நினிவேக்கு போக மறுத்து, இறைவனுக்கு ஒளித்து தர்சீசு நகருக்கு போக கப்பலில் புறப்பட்டார். கப்பல் கடலில் கொந்தளிப்பக்கு உள்ளானது. அதனால் இதற்கு காரணம் யார் என கண்டறிய சீட்டு போட்டனர். அது யோனா இறைவாக்கினர் பெயருக்கு விழுந்தது. இதனால் தன்னை கடலில் போடுமாறு யோனா இறைவாக்கினர் கூறினார். அவர்களும் அவரை கடலில் போட்டனர். உடனே திமிங்களம் அவரை விழுங்கி 3 நாளுக்குப் பின் நினிவே கரையில் கக்கியது. பின் நினிவே நகருக்கு சென்று பாவத்தை விட்டு வாழும் படி கூறினார். மக்களும் மனம் திருந்தி வாழ்ந்து கடவுள் பக்கம் திரும்பினர்.

4. “சமூக நீதியின்” இறைவாக்கினர் என அழைக்கப்பட்டவர் யார்?
   ஆமோஸ் இறைவாக்கினர்
5. தனது திருமண வாழ்வை இறைவாக்குப் பணியாக கொண்டவர் யார்?
   ஒசேயா இறைவாக்கினர்
6. மனம் வருந்துதலின் மூலம் இறைவனின் இரக்கத்திற்கு மக்களை தூண்டியவர் ய
7. இறைவன் யோனா இறைவாக்கினரை இறைவாக்குரைக்க போகும்படி பணித்த இடம்?
   நினிவே
8. ஒசேயா இறைவாக்கினரின் மனைவியின் பெயர்?
   கோமேர்
9. யோனா இறைவாக்கினர் எத்தனை நாள் திமிங்களத்தின் வயிற்றில் இருந்தார்?
   3 நாள்
10. யோனா இறைவாக்கினர் சென்ற கப்பல் கடலில் கொந்தளிப்புக்கு உள்ளானது. அதற்கான காரணத்தை கண்டறிய அவர்கள் பயன்படுத்திய வழி?
    சீட்டு போட்டு

## பாடம் - 5
## குலமுதுவர் ஆபிரகாம்

1. குலமுதுவர் என்ற பதம் எதை குறிக்கின்றது?
   ஒரு இனத்தின், குலத்தின் தந்தையைக் குறிக்கின்றது.
2. குலமுதுவர்களுக்கு வழங்கப்பட்ட வேறு பெயர் யாது?
   பிதாப்பிதாக்கள்
3. குலமுதுவர்கள் யாவர்?
   1. ஆபிரகாம் 2. ஈசாக் 3. யாக்கோபு
4. ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்படு முன் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
   அபிராம்
5. ஆபிரகாமின் மனைவி பெயர்?
   சாராள்
6. சாராளின் ஆரம்பப் பெயர்?
   சாராயி
7. தொடக்கநூல் குலமுதுவர்களின் வரலாறு எந்த அதிகதரத்தில் கூறப்படுகின்றது?
   11 - 50
8. ஆபிரகாம் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?
   செமித்திய

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

9. ஆபிரகாமின் தொழில் யாது?
மந்தை மேய்த்தல்

10. ஆபிரகாமின் தந்தை பெயர் யாது?
தெராகு

11. இறைவனால் அழைக்கப்படுமுன் ஆபிரகாமின் கடவுள் நம்பிக்கை பற்றி யாது கூறுவீர்?
அவர் ஓர் அஞ்ஞானி

12. ஆபிரகாம் வாழ்ந்த இடத்தின் பெயர்?
ஊர்

13. ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்பட்ட இடம் யாது?
கானான்

14. ஆபிரகாமிற்கு வழங்கப்பட்ட வேறு பெயர்?
விசுவாசத்தின் தந்தை

15. ஆபிரகாம் ஏன் விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்?
இறைவனின் வாக்குறுதிகள் நடக்கும் என விசுவசித்ததால்

16. ஆபிரகாமை இறைவன் அழைத்து கூறியது யாது?
நீ உன் நாட்டை விட்டும் இனத்தை விட்டும் புறப்பட்டு நான் காட்டும் நாட்டிற்குப் போ"

17. ஆபிரகாமிற்கு இறைவன் கொடுத்த வாக்குறுதிகள் எவை?
1. உன் சந்ததியை பெருகச் செய்வேன்.
2. உனக்கு ஒரு நாட்டைத் தருவேன்.
3. உன் பொருட்டு உன் இனம் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும்.

18. இறைவன் ஆபிரகாமை அழைத்த போது அவரது வயது ?
75

19. இறைவன் ஆபிரகாமை அழைத்த போது சாராளின் வயது ?
65

20. ஆபிரகாமிற்கு ஈசாக்க பிறந்த போது அவரது வயது?
100

21. ஆபிரகாமிற்கு ஈசாக்க பிறந்த போது சாராளின் வயது?
90

22. ஆபிரகாமும் சாராளும் இறந்த பின் அடக்கம் செய்யப்பட்ட இடம்?
மம்பிரே பள்ளத்தாக்கு

23. ஆபிரகாமின் மனைவியர் பெயர்?
சாராள், ஆகார், செத்துராள்

24. ஆபிரகாமின் சகோதரனின் மகனின் பெயர்?
லோத்

25. ஆபிரகாம் முகம் கொடுத்த சாவால்கள் எவை?
1. பேரினம் உருவாதல்
2. நாடோடி வாழ்க்கை வாழ்வதற்கு நேரிட்டது.
3. ஆறியாத நாட்டிற்குச் செல்ல நேரிட்டது.

MRS.STELLA NITHLANAYAGAM (B.A(HONS)

**26.** ஆபிரகாம் அழைப்பில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய முன் மாதிரிகைகள் எவை?

1. ஆபிரகாமைப் போல் எம்மையும் இறைவன் பணிக்கு இழைக்கும் போது நாமும் கீழ்ப்படிய வேண்டும்.
2. ஆபிரகாமைப் போல் அழைப்புக்கு ஏற்ப இயலுமான வரை பணியாற்ற வேண்டும்.
3. ஆபிரகாமைப் போல் ஆண்டவரில் முழு நம்பிக்கை வைத்து இறைவார்த்தையை ஏற்று அதற்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.
4. ஆபிரகாமைப் போல் பணிக்காக பல தியாகங்களை செய்ய வேண்டும்.
5. ஆபிரகாமைப் போல் வாழ்வில் சந்திக்கும் சாவால்களுக்கு முகங் கொடுக்க அடிக்கடி செபிக்க வேண்டும்.

**27.** ஆபிரகாமின் அழைப்பில் காணப்படும் இரு தன்மைகள்?

1. தியாகம்
2. சவால்

**28.** ஆபிரகாம் செய்த தியாகங்கள்?

1. தனது தாய் நாடு
2. தனது உறவினர்
3. தந்தையின் இல்லம்

## பாடம் - 6

## இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கை

**1.** இன்றைய சமூகத்தில் காணப்படும் உடன் படிக்கைகள் எவை?

1. திருமண உடன்படிக்கை
2. சமாதான உடன்படிக்கை
3. வியாபார உடன்படிக்கை

**2.** இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கை யாது?

1. மாபெரும் வழிமரபினர்
2. என்றென்றும் உரிமையாகும் நாடு

**3.** இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கை நிகழ்வை எழுதுக.?

மூன்ற வயதுள்ள செம்மறியாடு, ஒரு காட்டுப் புறா, ஒரு மாடப் புறா ஆகியவற்றை என்னிடம் கொண்டு வந்து, அவைகளை இரண்டிரண்டு துண்டுகளாக வெட்டி, ஒவ்வொரு பகுதியையும் அதற்கு இணையான பகுதிக்கு எதிரெதிரெ வைத்தார். ஆனால் பறவைகளை வெட்டவில்லை சூரியன் மறைந்ததும் புகைந்த கொண்டிருந்த தீச் சட்டி ஒன்றும், எரிந்த கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றும் அந்த உடல்கள் நடுவே சென்று சுட்டேரித்தன.

**4.** இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதன் அடையாளம்?

புகைந்த கொண்டிருந்த தீச் சட்டி ஒன்றும், எரிந்த கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றும் அந்த உடல்கள் நடுவே சென்று சுட்டேரித்தன.

**5.** இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையின் அடையாளம் யாது?

விருத்த சேதனம்

**6.** அபிராம் என்பதன் பொருள் யாது?

மேன்மையான தந்தை

**7.** ஆபிரகாம் என்பதன் பொருள் யாது?

இனங்களின் தந்தை

MRS.SHEILA ANTHILANAYAGAM (B.A(HONS)

8. திருமுழுக்கு மூலம் உடன்படிக்கை வாழ்விலே பிரவேசித்த உம்மால் செய்யக் கூடிய 5 செயற்பாடுகள் தருக?
   1. எனது கிறிஸ்தவ முன்மாதிரிகையான வாழ்க்கையால் மற்றவர்களும் கிறிஸ்முவை அறியச் செய்தல்.
   2. மற்றவர்களின் முன்னிலையில் கிறிஸ்தவ நம்பிக்கைக்குச் சான்று பகர்தல்.
   3. புத்தக்கட்டளைக் ஏற்ப வாழ்தல்.
   4. பிறருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவெற்றல்.
   5. முறை தூதுப் பணி மூலம் உயிருள்ள கிறிஸ்துவக்குச் சான்று பகர்தல்.

## பாடம் - 7

## குலமுதுவர் ஈசாக்

1. ஈசாக்கின் மனைவியின் பெயர் என்ன?
   ரேபேக்காள்
2. ஈசாக்கின் பிள்ளைகள் யார்?
   1. ஏசாயு 2. யாக்கோபு
3. யாக்கோபு இஸ்ரயேலரின் தலைவர் என்பதற்கான முன்னறிவித்தல் எது?
   “ஒரு குடியை மற்றொரு குடி மேற்கொள்ளும்”
4. ஏசாயு என்ற பெயரின் பொருள் யாது?
   செந்நிறமாகவும், உடல் முழுவதும் முடியுமாக இருந்ததால்
5. யாக்கோபு என்ற பெயரின் பொருள் யாது?
   ஏசாயுவின் குதிக்காலை கையால் பற்றிக் கொண்டு வந்தது
6. ஈசாக்கு இறைவனை சந்தித்த இடம்?
   பெயேர்செபா
7. ஈசாக் என்பதன் பொருள் யாது?
   சிரித்தல்
8. யூதர்கள் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு எத்தனையாம் நாள் விருத்தசேதனம் செயவர்?
   8ம் நாள்
9. ஈசாக் பிறக்கும் போது சாராளுக்கு வயது எத்தனை?
   90
10. ஈசாக்கை பலியிட கொண்டு சென்ற இடம் யாது?
    மோரியா
11. இறைவன் ஈசாக்கிற்கு கொடுத்த வாக்குறுதி யாது?
    உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே, அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன், உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபை பெருகச் செய்வேன்.
12. ஈசாக் கிணறு வெட்டும் போது வாக்குவாதம் ஏற்படாததால் அவ் இடத்திற்கு இட்ட பெயர்?
    இரசுபோத்து
13. ஆபிரகாம் ஈசாக்கிற்கு பதிலாக இறைவனுக்கு பலியாக கொடுத்தது?
    ஆட்டுக் கிடாய்

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

**14.** ஈசாக்கின் வாழ்விலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் எவை?

1. ஆண்டவரில் உறுதியான நம்பிக்கை
2. பெற்றோருக்கு கீழ்ப்படிதல்
3. பிறருடன் பிரச்சினை படாதிருத்தல்
4. ஆண்டவரிடம் செபித்தல்
5. பெற்றோரின் அறிவுரைக்கு செவி சாய்த்தல்
6. வாழ்வில் ஏற்படும் துன்பங்களை பொறுமையோடு சகித்தல்

**15.** நீர் வீட்டில் பெற்றோருக்குக் கீழ்ப்படியும் சந்தர்ப்பங்கள் 5 தருக?

1. செபிக்க சொல்லும் போது
2. கடைக்கு போக சொல்லும் போது
3. தண்ணீர் எடுத்து தரும்படி சொல்லும் போது
4. தம்பிக்கு விட்டுக் கொடுக்கும்படி சொல்லும் போது
5. அம்மம்மாவுக்கு உதவி செய்யும்படி சொல்லும் போது

**யாரால் - யாருக்கு**

**16.** 1. இந்தக் தண்ணீர் எங்களது

யாரால் - கெராரில் இருந்த மேய்ப்பர்களால்

யாருக்கு - ஈசாக்கின் மேய்ப்பர்களுக்கு

**17.** 2. "ஆண்டவர் நம் எல்லையை விரிவுப்படுத்தியுள்ளார். நாட்டில் நாம் வளர்ச்சியுறுவோம்".

யாரால் - ஈசாக்கால்

யாருக்கு - ஈசாக்கின் மேய்ப்பர்களுக்கு

**18.** 3. "அஞ்சாதே நான் உன்னோடு இருக்கின்றேன். உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன்

**19.** 4. ஆபிரகாமின் பொருட்டு உனது வழி மரபை பெருகச் செய்வேன்".

யாரால் - இறைவனால்

யாருக்கு - ஈசாக்கிற்கு

**20.** ஈசாக்கிற்கு பிள்ளைகள் பிறந்த போது வயது எத்தனை?

60

**21.** ஆண்டவர் நம் எல்லையை விரிவுப்படுத்தியுள்ளார். நாட்டில் நாம் வளர்ச்சியுறுவோம் என்று கூறி நாடடிற்கு ஈசாக் இட்ட பெயர்?

இரகபேத்து

## பாடம் - 8
## குலமுதுவர் யாக்கோப்பு

**1.** யாக்கோபுவின் மனைவியர் பெயர்?

1. லேயா 2. ராகேல் 3. சில்பா 4. பில்கால்

**2.** யாக்கோபிற்கு எத்தனை பிள்ளைகள்?

12

1. ரூபன் 2. சிமியோன் 3. லேவி 4. யூதா 5. இசக்கார் 6. செபுலோன் 7. காத்து 8. ஆசேர் 9. தாண் 10. நப்தலி 11. யோசேப்பு 12. பெஞ்சமின்

MRS.STELLA NITHIANAYAGAM (B.A(HONS)

**3.** பழைய ஏற்பாட்டில் இருந்த கோத்திரம் எத்தனை?

12

**4.** யாக்கோபுவிற்கு இறைவன் கொடுத்த வாக்குறுதி?

1. உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் என் வழிமரபிற்கும் தந்தருள்வேன்.
2. உன் வழிமரபே நிலத்தின் மண்ணுலகிற்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு திசைகளில் பரவிச் செல்வாய்.
3. உன் வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசி பெறும்.
4. நான் உன்னோடு இருப்பேன், நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னை திரும்பி வரச் செய்வேன். ஏனெனில் நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிட மாட்டேன்.

**5.** யாக்கோபு பெத்தலில் கண்ட கனவு யாது?

யாக்கோபு பெயேர்செபாவிலிருந்து காரானை நோக்கி பயணம் செய்தார். நீண்ட தூரம் பயணம் செய்ததால் களைப்பாற ஓரிடத்தில் கல்லொன்றை தலையணையாக வைத்துக் கொண்டு படுத்துறங்கினார். அப்பொழுது ஒரு கனவு கண்டார். அக் கனவில் ஓர் ஏணி வானத்திலிருந்து பூமி வரை வைக்கப்படிருப்பதாகவும், அதன் மேல் வானதூதர்கள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர். அவ்வேளை ஆண்டவர் யாக்கோபுவிடம் “உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தந்தருள்வேன” என்றார்.

**6.** “பெத்தல்” என்பதன் பொருள் யாது?

ஆண்டவரின் இல்லம்

**7.** இறைவன் யாக்கோபுவுடன் பெத்தலில் செய்து கொண்ட உடன்படிக்கை யாது?

உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் என் வழிமரபிற்கும் தந்தருள்வேன். உன் வழிமரபே நிலத்தின் மண்ணுலகிற்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு திசைகளில் பரவிச் செல்வாய் உன் வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசி பெறும். நான் உன்னோடு இருப்பேன், நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னை திரும்பி வரச் செய்வேன். ஏனெனில் நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிட மாட்டேன்.

**8.** யாக்கோபு கனவு கண்ட இடத்தின் ஆரம்ப பெயர் யாது?

லூசு

**9.** யாக்கோபுவிற்கு பெனியேலில் நிகழ்ந்த நிகழ்வு யாது?

யாக்கோபு தன் சொந்த நாட்டிற்கு பயணம் செய்து கொண்டிருக்கையில் பெனியேல் என்ற இடத்தில் ஓர் ஆடவர் அவரோடு போரிட்டார். யாக்கோபுவை வெற்றி கொள்ள முடியாமற் போகவே அந்த ஆடவர் யாக்கோபுவின் தொடையை தொட்டார். அப்பொழுது யாக்கோபுவின் தொடைச் சந்து விலகியது. அந்த ஆடவர் யாக்கோபுவிடம் தன்னை போக வடுமாறு கேட்டார். யாக்கோபு அவரிடம் தன்னை ஆசீர்வதிக்குமாறு கேட்டார். அவரும் இனிமேல் உன் பெயர் “இஸ்ரயேல்” என ஆசீர்வதித்தார்.

**10.** “இஸ்ரயேல்” என்பதன் பொருள் யாது?

கடளோடும் மனிதரோடும் போராடி வெற்றி

MRS.STELLANTHILANAYAGAM (B.A(HONS)

**11.** யாக்கோபு தன் சகோதரன் எசாயுவோடு ஒப்புரவாகுதல் நிகழ்வை தருக?

எசாயு நானூறு (400) ஆட்களுடன் யாக்கோபுவை நோக்கி வந்தார். யாக்கோபு முன் சென்று

**12.** எசாயுவை ஏழு (7) முறை தரையில் வீழ்ந்து வணங்கினார். ஏசாயு யாக்கோபுவை அரவணைத்து கொண்டார்.

**13.** யாக்கோபு தன் சகோதரன் எசாயுவோடு ஒப்புரவாகுதல் நிகழ்விலிருந்து பெறப்படும் முன்மாதிரிகை எவை?

1. யாக்கோபு போல் எங்கள் பிழையை ஏற்று மன்னிப்புப் பெற வேண்டும்.
2. எசாயுவைப் போல எமக்கு தவறிழைப்போரை மன்னிக்க வேண்டும்.
3. வார்தையால் மன்னிப்பதை செயலில் காட்ட வேண்டும்.
4. சகோதர்களுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

## பாடம் - 9
## திருத்தாதர்களின் அழைப்பு

**1.** இயேசு அழைத்த முதல் சீடர் யார்?

பேதுரு

**2.** இயேசு அழைத்த இரண்டாவது சீடர் யார்?

அந்திரேயா

**3.** இயேசு சீடர்களை அழைக்கும் போது பயன்படுத்திய வார்த்தைகள்?

என் பின்னே வாருங்கள்

**4.** இயேசுவின் சீடர்கள் எத்தனை பேர்?

12

1. புனித பேதுரு
2. புனித அந்திரேயா
3. புனித பெரிய யாக்கோபு
4. புனித யோவான்
5. புனித பிலிப்பு
6. புனித பர்த்தலமேயு
7. புனித தோமா
8. புனித மத்தேயு
9. புனித சிறிய யாக்கோபு
10. புனித ததேயு
11. புனித தீவிரவாதி சீமோன்
12. யூதாஸ் இஸ்காரியோத்

**5.** இயேசுவை காட்டிக் கொடுத்த சீடர் யார்?

யூதாஸ் இஸ்காரியோத்

**6.** யூதாஸ் இஸ்காரியோத் எவ்வாறு இறந்தார்?

தானே தூக்கில் தொங்கி இறந்தார்.

**7.** இறந்த யூதாஸ் இஸ்காரியோத் எத்தனையாவது சீடர்?

12 வது

**8.** இறந்த யூதாஸ் இஸ்காரியோத்திற்கு பதிலாக தெரிவு செய்யப்பட்ட சீடர் யார்?

மத்தியாஸ்

**9.** புனித மத்தியாஸ் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்?

சீட்டு எழுதி

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

**10.** இயேசுவின் அழைப்பை ஏற்ற சீடர்களிடம் காணப்பட்ட பண்புகள் எவை?

1. இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.
2. அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவை பின் தொடர்ந்தது.
3. இயேசுவிற்கு தம் வாழ்வில் முதலிடம் அளித்தார்கள்.
4. நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவித்தாரர்கள்.

**11.** கிறிஸ்தவ அழைப்பிற்கு பதிலளிப்பதற்கு நீர் செய்ய வேண்டியது யாது?

1. சீடர்களின் கிழ்ப்படிதலை எம் வாழ்வில் முன்மாதிரிகையாக கொள்ள வேண்டும்.
2. நாம் பெறும் அழைப்பிற்கு எம் வாழ்வின் எல்லாச் சந்தர்பங்களிலும் பதிலளிக்க வேண்டும்.
3. எமக்கு தரப்படும் பொறுப்புகள், கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.
4. இறைவார்த்தையை வாசித்து தியானிக்க வேண்டும்.
5. இறைவார்த்தையை மற்றவர்களுக்கு விளக்க வேண்டும்.

**12.** மத்தேயுவின் அழைப்பை தருக.

மத்தேயு என்பவர் மக்களிடம் வரி அறவிடுபவர். இவர் சுங்கச் சாவடியில் அமர்ந்திருப்பதைக் கண்ட இயேசு, அவரிடம் " என்னை பின்பற்றி வா'' என்றார். வெரும் எழுந்து இயேசுவை பின்பற்றிச் சென்றார்.

**13.** மத்தேயுவின் அழைப்பிலிருந்து எமக்கு உணர்த்தும் செய்த் யாது?

இயேசு மக்களிடையே பாகுபாடு காட்டவில்லை.

**14.** இயேசு பன்னிருவரை தெரிவு செய்து அவர்களுக்கு இட்ட பெயர் யாது?

சீடர்கள், திருத்தூதர்கள்

**15.** இயேசு திருத்தூதர்களிடம் மறை தூதுப் பணியை பொறுப்பு கொடுத்த சந்தர்ப்பம் யாது?

இயேசு விண்ணேற்பு அடைய முன்

**16.** இயேசு திருத்தூதர்களிடம் மறை தூதுப் பணியை பொறுப்பு கொடுத்து கூறியது யாது?

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கடைப்படிக்கும் படி கற்பியுங்கள். இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன்.

**17.** நீர் கிறிஸ்துவை உலகிற்கு அறிமுகம் செய்ய கடைப்பிடிக்க வேண்டியவை?

1. திருவிவிலியத்தை நன்கு கற்றல்.
2. அடையாளங்களைப் பெற்றுக் கொள்ளல்.
3. திருவழிபாடுகளில் தவறாது பங்கு கொள்ளல்.
4. இறைவார்தையை வாசித்தல், தியானித்தல், அதன்படி வாழுதல்.
5. மறை பரப்புப் பணியில் ஈடுபடுதல்.
6. பங்கில் பக்திச் சபைகளில் இணைந்து பணியாற்றுதல்.

**18.** இயேசு முதல் சீடருக்கு அளித்த அழைப்பிற்கு ஏற்ப நீர் பாடசாலையில் பணியாற்றும் 5 முறைகயை எழுதுக.

1. எனது சக மாணவர்களுக்கு இயேசுவைப்பற்றி கூறுவேன்.
2. வழிபாட்டின் போது இறைவார்தையை வாசிப்பதன் மூலம் இயேசுவைப்பற்றி கூறுவேன்.
3. மாணவர்களின் நற்சிந்தனை நேரத்தில் இயேசுவைப்பற்றி கூறுவேன்.
4. கிஸ்தவ மன்ற நிகழ்ச்சியின் போது இயேசுவைப்பற்றி கூறுவேன்.
5. பாட நேரம் இயேசுவைப்பற்றி கூறுவேன்.

MRS STELLA NITHIANANAYAGAM (BA(HONS)

**19.** யூதாஸ் இஸ்காரியோத்திற்கு பதிலாக மத்தியாசை தெரிவு செய்த சம்பவத்தை எழுதுக.

ஒரு நாள் ஏறக்குறைய நூற்றிருபது (120) பேர் கூடியருக்க பேதுரு இயேசுவை காட்டிக் கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்திற்கு பதிலாக ஒருவரை தெரிவு செய்ய வேண்டியிருப்பதால் நம்மிடையேயுள்ள இருவரில் ஒருவரை தெரிவு செய்ய சீட்டு போடுவோம் என்றார். அதன்படி இருவரின் பெயரை எழுதி சீட்டு போட்ட பொது மத்தியாஸ் பெயருக்கு சீட்டு விழுந்தது. அதன்படி மத்தியாஸ் 12 வது சீடராக தெரிவு செய்யப்பட்டார்.

**20.** யூதாஸ் இஸ்காரியோத்திற்கு பதிலாக கூறப்பட்ட இருவரின் பெயர் யாது?

1. மத்தியாஸ்  2. யோசேப்பு என்னும் பர்சபா

**21.** யூதாஸ் இஸ்காரியோத்திற்கு பதிலாக சீடரை தெரிவு செய்வதற்கு விதித்த நிபந்தனை யாது?

1. இயேசுவுக்கு சான்று பகர வேண்டும்.
2. யோவான் திருமுழுக்கு கொடுத்து வந்த காலமுதல் ஆண்டவர் இயேசு விண்ணேற்பு அடைந்த நாள்வரை நம்மோடு அருக்க வேண்டும்.

**22.** இயேசு இவ்வுலகிலிருந்து போகும் முன் தம் சீடர்களுக்கு அளித்த கட்டளைகள் 3 எழுதுக.

1. எல்லா மக்களையும் சிடராக்குங்கள்.
2. தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்.
3. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்படிக்கும் படி கற்பியுங்கள்

**23.** மற்றவர்களை இறைவன் பால் திருப்புவதற்கு நீர் செய்யக் கூடிய 5 செயல்கள்?

1. நல்ல வார்தைகளைப் பேசுதல்.
2. நல்ல செயல்களைச் செய்தல்.
3. தேவையில் உள்ளவர்களுக்கு உதவுதல்.
4. பாடசாலை கடமைகளை நிறைவாக செய்தல்.
5. பெரியவர்களை மதித்து நடத்தல்

## பாடம் - 10

## திருமுழுக்கு

**1.** அருளடையாளங்கள் என்பது யாது?

கண்ணுக்குப் புலப்படாத இறைவனின் அருளை, புலங்களுக்கு விளக்கக்கூடிய வகையில் வெளிப்படுத்துகின்றனவும், கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டனவும் ஆகும்.

**2.** அருளடையாளங்கள் எத்தனை?

**7**

1. திருமுழுக்கு
2. ஒப்புரவு
3. நற்கருணை
4. உறுதிப்பூசுதல்
5. திருமணம்
6. குருத்துவம்
7. நேயிற்பூசுதல்

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

3. திருமுழுக்கு சடங்கைத் தருக.
    1. திரித்துவப் புகழோடு ஆரம்பித்தல்.
    2. பிள்ளையின் பெயரை விசாரித்தல்.
    3. பெற்றோர், ஞானப் பெற்றோர் ஆகியோரிடம் அவர்களின் பொறுப்புக்களை ஒப்படைத்தல்.
    4. பிள்ளையின் நெற்றியில் குருவானவர், பெற்றோர், ஞானப் பெற்றோர் ஆகியோர் சிலுவையடையாளம் வரைதல்.
    5. இறைவார்த்தை வழிபாடு , விசுவாசிகளின் மன்றாட்டு
    6. தூயவர்களின் துணையை வேண்டுதல்.
    7. அசுத்த ஆவியை ஓட்டும் செபம் சொல்லுதல்.
    8. திருமுழுக்கு ஆயத்த எண்ணெய் பூசுதல்.
    9. திருமுழுக்கு வார்த்தைப்பாடு அளித்தல்.
    10. தலை மீது நீரை ஊற்றி திருமுழுக்களித்தல்.
    11. திருத்தைலம் பூசுதல்
    12. வெண்ணிற ஆடை அணிதல்.
    13. பாஸ்கா மெழுகுவர்த்தியினால் மெழுகுவர்த்தியை ஒளியேற்றுதல்.
    14. இயேசு கற்ப்பித்த செபத்தை சொல்லுதல்
    15. பெற்றோர், ஞானப் பெற்றோரை ஆசீர்வதித்தல்.
    16. இறுதி ஆசீர் வழங்குதல்.
4. பிள்ளையின் நெற்றியில் குருவானவர், பெற்றோர், ஞானப் பெற்றோர் ஆகியோர் சிலுவையடையாளம் வரைதலின் பொருள் யாது?
   சிலுவை வழியாக கிறிஸ்து பெற்றுத் தந்த மீட்பை ஞாபகபடுத்துதலாகும்.
5. திருமுழுக்கு வார்த்தைப்பாடு யாது?
   சாத்தானை விட்டுவிட்டு மூவொரு இறைவனை விசுவசிப்பதாக பிள்ளைக்காக பெற்றோர், ஞானப் பெற்றோர் வாக்களிப்பர்.
6. தலை மீது நீரை ஊற்றி திருமுழுக்களித்தலின் பொருள் யாது?
   குருவானவர் தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் நான் உன்னைக் கழுவுகிறேன்'' எனக் கூறி பிள்ளையின் தலை மீது தண்ணீர் ஊற்றுவார். இச் சடங்கு வழியாக திருமுழுக்கு பெறுபவர் நீரினாலும் தூய ஆவியினாலும் திருமுழுக்கு பெறுகின்றார்.
7. கிறிஸ்மா தைலம் ஏன் பூசப்படகின்றது?
   இத் தைலத்தினால் திருமுழுக்கு பெறுபவர் திருப்பொழிவு செய்யப்படுகின்றார்.
8. திருமுழுக்குச் சடங்கு பற்றி கூறும் நூல் ?
   திருவாழ்வு
9. திருமுழுக்கின் போது அவசியமானதும்கட்டாயமானதுமான படிமுறை?
   தலை மீது நீரை ஊற்றுதல்
10. திருமுழுக்கின் போது வெண்ணிற ஆடை அணிவது எதன் அடையாளம்?
   கிறிஸ்துவை அணிந்து கொள்வதன் அடையாளம்
11. திருமுழுக்கின் போது பாஸ்கா திரியிலிருந்து மெழுகுவர்த்தியை ஒளியேற்றுவது எதன் அடையாளம்?
   கிறிஸ்துவினால் ஒளியெற்றப்படுவதன் அடையாளம்

MRS.STELLA NITHLANAYAGAM (B.A(HONS)

**1.** திருமுழுக்கு பற்றிய திருச்சபையின் சட்டங்கள் எவை?

1. பிள்ளையின் பங்கு ஆலயத்தில் திமுழுக்கு கொடுக்க வேண்டும். (857)
2. பங்குக்கு வெளியில் திருமுழுக்கு கொடுப்பதாயின் தகுந்த காரணம் இருக்க வேண்டும். (862)
3. பிள்ளை பிறந்து சில வாரங்களுக்குள் திருமுழுக்கு கொடுக்க வேண்டும்.
4. பெற்றோர் தகுந்த முறையில் ஆயத்தம் செய்ய வேண்டும். (867)
5. மரணத் தருவாயில் உள்ள பிள்ளைக்குக் கூடிய விரைவில் திருமுழுக்கு கொடுக்க வேண்டும்.
6. மரணத் தருவாயில் உள்ள ஒருவர் திருமுழுக்கு பெற்றால், அவர் கிறிஸ்தவ மறையின் எதிர்பார்ப்பின் படி வாழ வேண்டும்.
7. திருமுழுக்கின் போது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். (868)

**13.** திருமுழுக்கு பற்றிய திருச்சபையின் சட்டங்கள் காணப்படுவது?

திருப்பீடச் சட்டத் தொகுப்பில்

## பாடம் 11

## குருத்துவம்

**1.** சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் எவை?

1. குருத்துவம் 2. திருமணம்

**2.** இயேசு எப்போது குருத்துவத்தை ஏற்படுத்தினார்?

பெரிய வியாழன் அன்று

**3.** அருட்பணியாளர்களின் திருநாள் எப்போதுகொண்டாடப்படுகின்றது?

பெரிய வியாழன் அன்று

**4.** குருத்துவம் பற்றி 5 வசனம் எழுதுக.

1. குருத்துவம் ஓர் அருளடையாளம்.
2. இவ் அருளடையாளத்தை ஒரு முறை மடடும் தான் பெற முடியும்.
3. இது ஆன்மாவில் அழியாத முத்திரையை பதிக்கின்றது.
4. அருட்பணியாளர்கள் இறைவனுக்கும் மனிதனுக்கும் நடுநிலையாளராக பணியாற்றுகின்றனர்.
5. இது இயேசுவால் ஏற்படுத்தப்பட்டது.

**5.** பணிக்குருத்துவத்தின் மூன்று நிலைகளும் எவை?

1. திருத்தொண்டர் 2. குருத்துவம் 3. ஆயர் நிலை

**6.** திருத்தொண்டர்களின் கடமைகள் யாது?

1. திருமுழுக்கு வழங்குதல்
2. மரணச் சடங்குகளை நடாத்துதல்
3. திவ்விய நற்கருணை ஆசீர் வழங்குதல்
4. திருப்பலியிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் இறைவார்த்தையைங் போதித்தல்
5. திருப்பலியிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் ஆயரும் குருக்களும் உதவுதல்.

MRS.SELLANITHLANAYAGAM (B.A(HONS)

**7.** குருக்களின்( அருட்பணியாளர்கள்) கடமைகள் எவை?

1. திருப்பலி ஒப்புக் கொடுத்தல்
2. நற்செய்தியைப் போதிதித்தல்
3. மக்களின் உண்மையான ஆயனாக செயற்படல்.
4. அருளடையாளங்களை அளித்தல்
5. பங்கில் முதன்மை மறையாசிரியராக பணியாற்றுதல்.
6. பல்வேறு சந்தர்பங்களில் ஆசீர்வாதம் அளித்தல்.

**8.** ஆயரின் பணிகள் எவை?

1. மறைமாவட்டத்தை நிருவாகித்தல்.
2. இறைமக்களுக்கு அறிவூட்டுதல்.
3. இறைமக்களைத் தூய்மைப்படுத்தல்.
4. இறைமக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்தல்.
5. அருளடையாளங்களை அளித்தல்

**9.** கத்தோலிக்க அருட்பணியாளர்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

2

1. மறைமாவட்ட அருட்பணியாளர்கள்
2. துறவற அருட்பணியாளர்கள்

**10.** மறைமாவட்ட குருக்கள் எனப்படுவோர் யார்?

இவர்கள் ஆயரின் தலமைத்துவத்தின் கீழ் பொது நிலையினர் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்குப் பணி புரிந்து அவர்கள் இறையரசை நோக்கிப் பயணிக்க வழிகாட்டுபவர்கள்.

**11.** துறவறச் சபைக் குருக்கள் எனப்படுவோர் யார்?

துறவறச் சபையின் தலைவராக விளங்கும் குருவானவரின் கீழ் குறிப்பிட்ட சபையின் சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றி விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவித்து வாழ்பவர்கள்.

**12.** மறைமாவட்ட குருக்களுக்கான வார்த்தைப் பாடுகள் எத்தனை எவை?

2

1. கீழ்ப்படிதல்
2. மணத் துறவு

**13.** மறைமாவட்ட குருக்களுக்கான வார்த்தைப் பாடுகளை விளக்குக.

1. கீழ்ப்படிதல் - மறைமாவட்ட ஆயரும் அவருக்கும் பின் வருபவர்களுக்கும் கீழ்ப்படிதல்
2. மணத்துறவு – திருமணமாகாது தமது முழு வாழ்வையும் இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

**14.** துறவற அருட்பணியாளர்களுகான வார்த்தைப் பாடுகள் எத்தனை எவை?

3

1. கீழ்ப்படிதல்
2. கற்பு
3. ஏழ்மை

**15.** துறவற அருட்பணியாளர்களுகான வார்த்தைப் பாடுகளை விளக்குக.

1. **கீழ்ப்படிதல்** - தமது துறவற சபையின் மேலாளருக்கும், தலைமை அருட்பயியாளருக்கும் கீழ்ப்படிதல்.
2. **கற்பு** - திருமணமாகாது தமது முழு வாழ்வையும் இறைவனுக்கு அர்ப்பணித்தார்.
3. **ஏழ்மை** - தங்களுக்கென எந்த சொத்தையும் வைத்துக்கொள்ளாமை.

MRS.STELLA NITHIANAYAGAM (B.A(HONS)

16. அருட்பணியாளர்கள்மட்டில் பொதுநிலையினரின் கடமைகள் எவை?

1. அவர்களுக்காகச் செபித்தல்
2. பங்குப் பணிகளில் உதவுதல்
3. இறையரசை பரப்பும் பணிகளில் உதவுதல்
4. திருவழிபாட்டுச் சபைகளில் உதவுதல்
5. மறைக்கல்விப் பணிகளில் உதவுதல்
6. பொதுப்பணிகளில் உதவுதல்.

17. குருத்துவம் என்னும் அருளடையாளத்தை வழங்க அதிகாரம் உடையவர் யார்?
மறைமாவட்ட ஆயர்

18. குருத்துவத்தை வழங்கும் சடங்கு முறை?
ஆயர் திருநிலைப்படுத்தப்படுபவரின் தலை மீது கைகளை வைத்து செபிப்பதன் மூலமும் அருள் பொழிவு வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலமும் இந்த அருளடையாளத்தை வழங்குவார்.

19. ஆயர்களை நியமிக்கும் அதிகாரமுடையவர் யார்?
திருத்தந்தை

20. இறைவனுக்கும் இறைமக்களுக்கும் இடையே நடுநிலையாளராக செயற்படுபவர்கள்?
அருட்பணியாளர்கள்

## பாடம் 12
## துறவற வாழ்வு

1. துறவற வாழ்வு என்பது யாது?
முழுமையாக இறைவனுக்கு அர்பணிக்கப்பட்ட வாழ்வாகும்.
2. துறவற சபைகளை வகைப்படுத்துக?
1. துறவற சபை அருட்பணியாளர்கள் 2. குருத்துவம் அல்லாத துறவிகள்
3. குருத்துவம் அல்லாத துறவிகளை வகைப்படுத்துக?
2
1. துறவற அருட்சகோதரர்கள்
2. துறவற அருட்சகோதரிகள்

4. துறவற வார்த்தைப்பாடுகள் எத்தனை? அவற்றை விளக்குக.
3
1. கற்பு:- மணத்துறவு நிலையில் இறையரசுக்காகத் தமது முழுவாழ்வையும் அர்பணித்தல்.
2. ஏழ்மை:- இவ்வுலகப் பொருட் செல்வங்கள் மட்டில் பற்றற்று உரிமை கோராது இருத்தல்
3. கீழ்ப்படிதல்:- இறை சித்தத்தை ஏற்று தமது சபைத் தலைவர்களுக்கு பணிந்து வாழ்தல்.
5. துறவற அருட்பணியாளர்களின் சபை என்பது யாது?
அருட்பணியாளர் ஒருவர் ஏதேனும் ஒர துறவற சபையை சார்ந்திருத்தல் ஆகும்.
6. துறவற அருட்பணியாளர்களின் சபை எவை?
1. அமல மரித்தியாகிகள் சபை
2. ஆசீர்வாதப்பர் சபை
3. நற்கருணை நாதர் சபை
4. பிரான்சிஸ்கன் 3ம் சபை
5. கிளரேசியன் சபை
7. குருத்துவம் அல்லாத துறவிகள் என்பது யாது?
இவர்கள் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள என அழைக்கப்படுவர். நற்கருணையைப் பகிர்தளிக்கும் பணியை நிறைவேற்றுவர்.
8. துறவற அருட்சகோதரர்கள் சபைகள் எவை?
1. மாறிஸ் சபை
2. அன்புச் சகோதரிகள் சபை
3. டி லாசால் சகோதரர் சபை
4. பிரான்சிஸ்கன் மறைதூதுச் சகோதரர் சபை

MRS.SHEELA NITHILANAYAGAM (B.A.HONS)

**9.** அருட்சகோதரிகள் சபைகள் எவை?
1. திருக்குடும்ப கன்னியர் சபை
2. நல்லாயன் கன்னியர் சபை
3. தூய தூதர்கள் கன்னியர் சபை
4. அப்போஸ்தலிக்க கார்மேல் சபை
5. சிலுவையின் கன்னியர் சபை
6. டோமினிக்கன் கன்னியர் சபை

**10.** அமலமரித் தியாகிகள் சபையின் பணிகள் எவை?
1. ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவித்தல்
2. கல்விப் பணி
3. பங்குப் பணி
4. ஆன்மீக ஆலோசனை
5. தியானம், ஞான ஒடுக்கம், வழி நடத்துதுதல் பணி.

**11.** மாறிஸ் சகோதரர்களின் பணிகள் எவை?
1. கல்விப்பணி
2. மேய்ப்புப் பணி.
3. செபம், சகோரத்துவம் வழியாக இறைவனை மகிமைப்படுத்தல்.

**12.** ஆசீர்வாதப்பர் சபையின் பணிகள் எவை?
1. கல்விப்பணி
2. மேய்ப்புப் பணி.
3. செபம், சகோரத்துவம் வழியாக இறைவனை மகிமைப்படுத்தல்.

**13.** டி லாசால் சகோதரர் சபையின் பணிகள் எவை?
1. கல்விப்பணி
2. இளையோருக்கு சுய தொழில் கல்விப் பயிற்சி வழங்குதல்.
3. கிறிஸ்துவைப் பறைசாற்றுதல்.

**14.** பிரான்சிஸ்கன் மறைதூதுச் சகோதரர் சபையின் பணிகள் எவை?
1. மறையை அறிவித்தல்
2. சிறுவர் இல்லங்களை நடாத்துதல்

**15.** நல்லாயன் கன்னியர் சபையின் பணிகள் எவை?
1. கல்விப் பணி
2. இளம் பெண்கள் வளர்ச்சியும் பராமரிப்பும்
3. அனாதைகளை பாராமரித்தல்.
4. முதியோர் இல்லங்கள் நடாத்துதல்

**16.** தூய தூதர்களின் கன்னியர் சபையின் பணிகள் எவை?
1. கல்விப்பணி
2. சமூகப் பணி
3. தோட்டங்களில் பணிபுரிதல்.
4. முன் பாடசாலைப் பணி.
5. பங்குப் பணி

**17.** அப்போஸ்தலிக்க கார்மேல் சபை சபையின் பணிகள் எவை?
1. கல்விப் பணி
2. வயோதிபர் இல்லம் நடாத்துதல்
3. சமூகப் பணி
4. பங்குப்பணி

**18.** திருக்குடும்பக் கன்னியர் சபையின் பணிகள் எவை?
1. குடும்பப் பணி
2. கல்விப்பணி
3. சமூகப்பணி
4. மறைத்தூதுப் பணி

**19.** திருச்சிலுவைக் கன்னியர் சபையின் பணிகள் எவை?
1. மருத்துவப் பணி
2. தோட்டங்களில் பணிபுரிதல்.
3. சமூகப்பணி
4. பங்குப் பணி
5. மறை பணி

**20.** டோமினிக்கன் கன்னியர் சபையின் பணிகள் எவை?
1. சமூகப்பணி
2. பங்குப் பணி
3. மறை பணி
4. முன்பள்ளிப் பணி

MRS.STELLA NITHLANAYAGAM (B.A(HONS)

## பாடம் 13
## பொதுநிலையினர் மறைத்தூதுப் பணி

**1.** பொதுநிலையினர் என்பவர் யார்?
திருநிலையினர் துறவறத்தார் தவிர்ந்த இறைமக்களே பொது நிலையினர் ஆவார்.

**2.** பொது நிலையினர் திருத்தூதுப் பணிக்கான அழைப்பை எதனூடாகப் பெறுகின்றனர்?
திருமுழுக்கினூடாக.

**3.** “இறைமக்கள்” என்ற பதம் யார் யாரை உள்ளடக்குகின்றது?
திருநிலையினர், பொதுநிலையினர், துறவறத்தார் அனைவரையும்

**4.** பொதுநிலையினரின் சாட்சிய வாழ்வுக்கு மிகச் சிறந்த களங்கள் எவை?
1. குடும்பம்
2. தாம் வாழும் சூழல்
3. தொழில் புரியும் இடம்
4. பங்குத்திருச்சபை

**5.** கிறிஸ்துவின் முப்பணிகள் எவை?
1. குருத்துவப் பணி
2. இறைவாக்கினர் பணி
3. அரச பணி

**6.** பொது குருத்துவத்தின் குருத்துவப் பணி 5 தருக.
1. மற்றவர்களுக்காக செபித்தல்
2. பீடப்பணியாளராக பணியாற்றுதல்
3. திருப்பலியில் குருவுக்கு உதவுதல்
4. பாடகர் குழுவில் இணைதல்
5. திருவழிபாட்டில் பக்தியாக பங்கு கொள்ளல்

**7.** பொது குருத்துவத்தின் இறைவாக்குப் பணி 3 தருக.
1. மறை சார்ந்த சங்கங்களில் பணியாற்றுதல்.
2. பாடசாலையில் தலைமைத்துவத்தை ஏற்று பணியாற்றுதல்.
3. கைவிடப்பட்டவர்களின் நலன் கருதி, சிரமதானப் பணிகளை முன் வந்து செய்தல்.

**8.** பொது குருத்துவத்தின் அரச பணி 4 தருக.
1. இறைவார்த்தைக்கு சான்று பகர்தல்.
2. உண்மையை வெளிப்படுத்தல்.
3. தினமும் திருவிவிலியத்தை வாசித்தல்.
4. சமுகத்தில் நீதியோடு வாழ்தல்

**9.** பொது குருத்துவத்தினால் அளிக்கப்படும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு துணை புரியும் ஒன்றியங்கள் 4 தருக.
1. திருப்பாலத்துவ சபை
2.. பாடல் குழாம்
3. பீடப்பணியாளர்
4. வீர சிறுவர் இயக்கம்

**10.** பொதுக் குருத்துவத்தின் மூன்று பணிகள் எவை?
1. மேய்ப்புப்பணி
2. குருத்துவப்பணி
3. இறைவாக்குப்பணி

**11.** குருத்துவத்தின் இரு பிரிவுகளும் எவை?
1. பணிக்குருத்துவம்
2. பொதுக்குருத்துவம்

**12.** பொதுநிலையினர் ஆற்றக் கூடிய பணிகள் எவை?
1. பீடப்பணியாளர்
2. வாசகர்
3. திருவழிபாட்டு மன்றாட்டுகளுக்கு தலைமை ஏற்றல்.
4. செப வழிபாடுகளை நடாத்துதல்
5. மறைக் கல்வியைப் போதித்தல்

**13.** திருப்பாலத்துவ சபையிலுள்ள நீர் செய்யக் கூடிய பணிகள் 5 தருக.
1. மற்றவர்களுக்காகச் செபித்தல்.
2. முன்மாதிரியாக வாழுதல்
3. இயேசுவின் அன்பை மற்றவர்களுடன் பகர்ந்து வாழுதல்.
4. குழு வாழ்விற்கு சான்று பகர்தல்.

**14.** பீடப்பணியாளராக நீர் செய்யக் கூடிய பணிகள் 3 தருக.
1. திருப்பலியில் பக்தியுடன் உதவுதல்.
2. ஆலயத்தை தூய்மையாக வைத்திருத்தல்.
3. அருட்தந்தையின் பணிகளில் உதவுதல்.

MRS.SELVANITHILANAYAGAM (B.A(HONS))

**15.** பாடல் குழாம் நீர் செய்யக் கூடிய பணிகள் 4 தருக.
1. திருவழிபாடுகளின் போது பாடலில் பங்கு கொள்ளல்.
2. இறைவார்த்தையை வாசித்தல்
3. பாடல்களில் நன்கு பயிற்சி பெறல்.
4. எனது ஆற்றல்களை இறை மகிமைக்காக பயன்படுத்தல் .

**16.** வீர சிறுவர் இயக்கததில் நீர் செய்யக் கூடிய பணிகள் 4 தருக.
1. சிரமதானப் பணிகளில் பங்க கொள்ளல்.
2. எனது ஆற்றல்களை இறை மகிமைக்காக பயன்படுத்தல் .
3. ஆளுமையைக் கட்டி எழுப்புதல்.
4. சமய வேறுபாடின்றி ஒற்றுமையுடன் பணியாற்றுதல்.

**17.** பொது குருத்துவத்தில் அளிக்கப்படும் பொறுப்பை நிறைவேற்றும் 5 விதங்களை தருக.
1. இறைவார்த்தையை வாசித்தல்
2. சிரமதானப் பணிகளில் பங்க கொள்ளல்.
3. ஆலயத்தை தூய்மையாக வைத்திருத்தல்.
4. திருவழிபாடுகளின் போது பாடலில் பங்கு கொள்ளல்.
5. சமய வேறுபாடின்றி ஒற்றுமையுடன் பணியாற்றுதல்.

**18.** உமது பங்கிலுள்ள பொது குருத்துவத்தின் ஒன்றியத்தின் பெயர்கள் 3 தருக.
1. திருப்பாலத்துவ சபை
2.. பாடல் குழாம்
3. பீடப்பணியாளர்

**19.** பங்கில் செயற்படும் ஒன்றியங்களில் நீர் இணைய விரும்பும் ஒன்றியத்தின் பெயரை எழுதி, அதனை விரும்புவதற்கான காரணத்தை தருக.
திருப்பாலத்துவ சபை
காரணம் - குழுவாக வாழலாம்

**பாடம் 14**

**திருமணம்**

**1.** திருமணத்தை ஏற்படுத்தியது யார்?
இறைவன்

**2.** திருமணத்தைப் பற்றி கூறும் நூல் எது?
தொடக்க நூல்

**3.** திருமணத்தில் பதவி நிலை சாட்சி யார்?
குரு

**4.** திருமணத்தில் சமுக நிலை சாட்சிகள் யார்?
1. உறவினர்
2. நண்பர்கள்

**5.** திருமணத்தை நிறைவேற்றுபவர்கள் யார்?
ஆணும், பெண்ணும்

**6.** திருமணம் என்பது யாது?
1.மக்கள் பணியின் அருளடையாளம்
2. ஒரு உடன்படிக்கையாகும்

**7.** உடன்படிக்கை என்பதன் பொருள் யாது?
ஒரு விடயம் தொடர்பாக இருவர் சம்பந்தப்பட்டு அதை செய்ய விருப்பம் தெரிவித்து செய்து கொள்ளும் சம்மதமே உடன்படிக்கையாகும்.

**8.** கத்தோலிக்கத் திருமணத்தின் பண்புகள் எவை?
1. ஒருமை 2. கட்டவிழாமை

MRS.STELLA NITHILANAYAGAM(B.A(HONS)

**9.** ஒருமை என்பது யாது?

ஒரு ஆண் ஒரு பெண்ணை அல்லது ஒரு பெண் ஒரு ஆணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளலாம் என்பதே ஒருமை ஆகும்.

**10.** கட்டவிழாமை என்பதன் பொருள் யாது?

கணவனும் மனைவியும் விவகாரத்து செய்ய முடியாது என்பதாகும்.

**11.** பெற்றோர் பிள்ளைகளுக்கு செய்யும் கடமைகள் 5 தருக.

1. பிள்ளைகளுக்கு அன்பு காட்டுதல்
2. பிள்ளைகளின் உடல், உளத் தேவைகளை நிறைவு செய்தல்.
3. நல்ல ஒழுக்கமுள்ள பிள்ளையாக வளர்த்தல்.
4. பாடசாலையில் சேர்த்து கல்வி கற்பித்தல்
5. கத்தோல்க்க நம்பிக்கையில் வளர்த்தல்

**12.** பிள்ளைகள் பெற்றோருக்கு செய்யும் கடமை 5 தருக.

1. பெற்றோரை மதித்து நடத்தல்
2. அவர்களுக்கு கீழ்படிதல்
3. அவர்கள் உள்ளத்தை புண்படுத்தக் கூடாது.
4. அவர்களின் முதுமையில் உதவுதல்.
5. நல்ல முறையில் கல்வி கற்றல்.

**13.** திருக்குடும்பத்திலிருந்து பெறக் கூடிய முன்மாதிரிகைகள் 5 தருக.

1. அன்னை மரியா இறைவனுக்கு கீழ்ப்படிந்தது போல் நாமும் இறைவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்
2. அன்னை மரியா தனது உறவனர் எலிசபேத்திற்கு உதவியது போல் நாமும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.
3. தந்தை யோசப்பு பாதுகாத்து குடும்பத்தை பாதகாத்து வழிநடத்தியது போல் தந்தையர்களும் நடந்து கொள்ள வேண்டும்.
4. இயேசுவை காணிக்கை கொடுத்து சட்டங்களை மதித்து நடந்தது போல் நாமும் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும்.
5. இயேசு கீழ்படிந்து நடந்தது போல் நாமும் கீழ்படிந்து நடக்க வேண்டும்.

**14.** இயேசு செய்த முதல் புதுமை எது?

தண்ணீரை இரசமாக்கியது

**15.** இயேசு அன்னை மரியாளை யாருக்கு தாயாக கொடுத்தார்?

சீடர்களுக்கு

**16.** பெற்றோருக்கு நீங்கள் உதவுக் கூடிய ஐந்து விதத்தினை எழுதுக.

1. வீட்டைக் கூட்டி, துப்பரவு செய்து
2. கடையில் பொருள்கள் வாங்கிக் கொடுத்து
3. சிறிய சகோதர்களை பராமரித்து
4. தண்ணீர் எடுத்துக் கொடுத்து
5. சமைக்கும் போது உதவி செய்து

MRS.STELLANTHILANAYAGAM (B.A(HONS)

## பாடம் - 15

## பெற்றோருக்கு மதிப்பளித்தல்

**1.** நான்காம் கட்டளை யாது?

உன் தந்தை, தாயை மதித்து நட.

**2.** பத்துக் கட்டளைகளை வகைப்படுத்துக.

02 வகை

1. ஒரே இறைவனை முழுமனதுடன் விசுவசித்தல்
2. அயலவரை அன்பு செய்தல்

**3.** நான்காவது கட்டளை மூலம் எமக்கு தரப்படும் செய்தி யாது?

1. பெற்றோரை மதித்து நடத்தல்
2. ஆசிரிய, ஆசிரியைகளை மதித்து நடத்தல்
3. பெரியோரை மதித்து நடத்தல்
4. திருச்சபையின் தலைவர்களை மதித்து நடத்தல்

**4.** பெற்றோர் மட்டில் பிள்ளைகளின் கடமை 5 தருக.

1. பெற்றோரை மதித்து நடத்தல்
2. அவர்களுக்கு கீழ்படிதல்
3. அவர்கள் உள்ளத்தை புண்படுத்தாதே
4. அவர்களின் முதுமையில் உதவுதல்.
5. அவர்களுக்கு சினமூட்டாதே

**5.** அருட்பணியாளர்கள், அருட்சகோர,சகோதரிகள் மட்டில் உமது கடமை 5 தருக.

1. அவர்களுக்கு மதிப்பளித்தல்
2. அவர்களின் பணியில் உதவுதல்
3. பங்குத் தந்தைக்கு பணியில் உதவுதல்.
4. திருவழிபாடுகளில் உதவுதல்
5. மறைககல்விப் பணிகளில் உதவுதல்.

**6.** பாடசாலை மட்டில் உமக்குள்ள கடமை 5 தருக.

1. அதிபர், ஆசிரியைகளை மதித்து நடத்தல்
2. மாணவத் தலைவர்களை மதித்து நடத்தல்
3. எனக்குள்ள கடமைகள்,பொறுப்புக்களை நிறைவேற்றல்.
4. பாடசாலை சொத்துக்களை பாதுகாத்தல்.
5. பாடசாலை சட்டங்களை மதித்து நடத்தல்.

**7.** நாட்டின் மட்டில் உமக்குள்ள கடமை 5 தருக.

1. நாட்டுத் தலைவர்களுக்கு மதிப்பளித்தல்.
2. அவர்களுக்காக செபித்தல்.
3. பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல்
4. இயற்கை வளங்களை வீண் விரயம் செய்யக் கூடாது
5. நாட்டின் சட்டங்களை மதித்து நடத்தல்.

MRS.SELLANTHILANAYAGAM (B.A(HONS)

8. நான்காம் இறை கட்டளைப் படி நாம் செய்ய வேண்டியது?
   1. பெற்றோர், பெரியோரை மதித்து நடத்தல்
   2. பெற்றோர், பெரியோருக்காக செபித்தல்.
   3. பெற்றோர், பெரியோரின் அறிவுரைப்படி நடத்தல்.

## பாடம் - 16

## பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக

1. கிரான் எத்தனையாம் கட்டளைக்கு எதிராக பாவம் செய்தார்?
   8ம்
2. உண்மை பற்றிய கூற்றுக்கள் 4 தருக.
   1. வாய்மையே வெல்லும்
   2. உண்மையே உயர்வடையும்
   3. உயிர் போனாலும் உண்மை பேச வேண்டும்.
3. ஆதித்திருச்சபையில் எட்டாம் கட்டளைக்கு எதிராக பொய் சொன்னது யார்?
   1. அனனியா
   2. சபிராள்
4. பிறருக்கு எதிராக பொய் சொல்லாதே எனக் கூறும் நூல்கள் எவை?
   1. விடுதலைப் பயணம்
   2. இணைச்சட்டம்
5. பொய்ச் சான்று கூறத் தூண்டும் தீய சக்தி எது?
   சாத்தான்
6. பொய்ச் சான்று கூறத் தூண்டும் தீய சக்தி எனக் கூறும் நூல்?
   யோவான் நற்செய்தி
7. தூய பவுல் உண்மை பற்றி கூறிய நூல்?
   எபேசியர்
8. ஒவ்வொருவரும் சொல்லிலும் செயலிலும் நேர்மையோடும் உண்மையோடும் வாழ வேண்டும் எனக் கூறும் நூல் எது?
   கத்தோலிக்க திருமறை நூல்
9. உண்மையோடும் வாழ வேண்டும் எனக் கூறும் கத்தோலிக்க திருமறை நூலின் அதிகாரம் எது?
   2464
10. உண்மை நிறைந்த சமுகத்தை கட்டியெழுப்ப உம்மால் செய்யக் கூடியவை எவை?
    1. எப்போதும் உண்மை பேச வேண்டும்.
    2. உண்மையுள்ளவராக வாழ வேண்டும்.
    3. பொய்யான தகவலை சொல்லக் கூடாது.
    4. தேரியாத விடயங்களைப் பற்றி பேசக் கூடாது

MRS.STELLA NITHLANAYAGAM (B.A(HONS)

## மூன்றாம் தவணை

### பாடம் - 17
### களவு செய்யாதிருப்பாயாக

**1.** 7ம் கட்டளை யாது?
களவு எடுக்காதே

**2.** 7ம், கட்டளைக்கு எதிரான பாவங்கள் (செயல்கள்) எவை?
1. களவு எடுத்தல்.
2. வஞ்சனையாகப் பிறருக்குரியதை அபகரித்தல்.
3. பிறரது உடைமைகளை அழித்தல்.
4. பிறரது உடைமைகளை பறித்து எடுத்தல்.

**3.** நற்செய்தியில் களவு எடுத்து இயேசுவால் மனம் திருப்பப்பட்ட நபர் யார்?
சக்கேயு

**4.** நீதியான முறையில் சொத்துக்களை பெறும் வழிகள் எவை?
1. நேர்மையான வழியில் உழைத்தல்.
2. விலை கொடுத்து வாங்குதல்.
3. நன்கொடை மூலம் பெறுதல்.

**5.** களவு இடம் பெறும் வேறு வழிகள்?
1. பொருள்களின் தரத்தை குறைத்தல்.
2. இரஞசம் கொடுத்தல்
3. சம்பளம் கொடுக்காமை

**6.** 7ம் கட்டளை தரும் செய்தி யாது?
இறைவனின் படைப்புக்களை பாதுகாக்க வேண்டும்

### பாடம் - 18
### பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக

**1.** 10வது கட்டளை யாது?
பிறர் உடமையை விரும்பாதே

**2.** 10வது கட்டளைக்கு எதிராக பாவம் செய்யத் தூண்டுவது எது?
போராசை

**3.** செவ்விந்தியர்களிடமிருந்து நிலங்களை அபகரிக்க பேராசை கொண்ட நாடு எது?
அமெரிக்கா

**4.** அமெரிக்காவுக்கு சியடெல் அளித்த பதில் யாது?
பேராசையைக் ஏற்படுத்திக் கொள்வதால் 10ம். 7ம் கட்டளைகளை மீறுகின்றோம்.

**5.** 7ம், 10ம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் (செயல்கள்) எவை?
1. களவு எடுத்தல்.
2. வஞ்சனையாகப் பிறருக்குரியதை அபகரித்தல்.
3. பிறரது உடைமைகளை அழித்தல்.
4. பிறரது உடைமைகளை பலாத்காரமாகப் பெற்றுக் கொள்ளல்.

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

6. பிறர் உடமையில் பேராசை கொள்ளாமல் இருக்க வேண்டும் என கூறும் நூல் எது?
பெரிய குறிப்பிடம் (அதிகாரம் 300)
7. பிறர் சொத்தை நீதியான முறையில் பெற்றுக் கொள்வது இக் கட்டளைக்கு எதிரான பாவமல்ல எனக் கூறும் நூல் எது?
கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி (அதிகாரம் 2537 )
8. போராசை எம்மை இறைவனிடமிருந்தும், அயலவர்களிடமிருந்தும் பிரிக்கின்றது எனக் கூறிய இறைவாக்கினர்?
மீக்கா
9. தலையான பாவங்களில் ஒன்று?
பொறாமை
10. பத்தாம் கட்டளைப்படி வாழ கடைப்பிடிக்க வேண்டிய 4 செயல்கள் எழுதுக.
1. எமக்கு கிடைப்பதில் திருப்தி கொள்ள வேண்டும்.
2. பிறர் உடமைகளை அபகரிக்க கூடாது.
3. பிறரிடம் பெற்றுக் கொண்டதை திருப்பி கொடுத்தல்.
4. மற்றவர் மட்டில் பொறாமை கொள்ளக் கூடாது.
5. வியாபாரத்தில் நீதியாக நடத்தல்.

## பாடம் - 19
## செபமாலைப் பக்தி

1. ஐரோப்பிய நாட்டினருக்கும், துருக்கி நாட்டினருக்கும் இடையில் நடந்த போரில் துருக்கி நாட்டினர் வெற்றி பெற காரணம் யாது?
செபமாலை சொன்னது
2. ஐரோப்பிய நாட்டினருக்கும், துருக்கி நாட்டினருக்கும் இடையில் நடந்த போரில் துருக்கி நாட்டினர் வெற்றி பெற்ற இடம் யாது?
லெபன்டோ
3. துருக்கி அரசனின் பெயர் யாது?
சுல்தான்
4. ஐரோப்பிய நாட்டினருக்கும், துருக்கி நாட்டினருக்கும் இடையில் நடந்த போரில் துருக்கி நாட்டினர் வெற்றி பெற்ற ஆண்டு?
1571.10.07
5. துருக்கியில் செபமாலை பக்தியை அறிமுகப்படுத்தியவர் யார்?
திருத்தந்தை 5ம் பயஸ்
6. துருக்கி நாட்டினர் வெற்றி பெற்றதை நினைவு கூரும் முகமாக அன்றைய தினத்தில் கொண்டாடப்பட்ட விழா?
வெற்றிமாதா விழா
7. வெற்றிமாதா விழா 1573 இல் எவ்வாறு அழைக்கப்பட்டது?
செபமாலை அன்னை விழா
8. வெற்றிமாதா விழாவை "செபமாலை அன்னை விழா"என பெயர மாற்றம் செய்த திருத்தந்தை?



MRS.STELLA NITHLANAYAGAM (B.A(HONS)

13ம் கிரகோரியார் (கிரகரி)

9. “செபமாலை அன்னை விழாவை” முழுத்திருச்சபையும் கொண்டாடிய ஆண்டு?

1716

10. “செபமாலை அன்னை விழாவை” முழுத்திருச்சபையும் கொண்டாட காரணமான திருத்தந்தை?

11ம் கிளமன்ட்

11. 1214ம் ஆண்டு செபமாலை பக்தியை அறிமுகப்படுத்தியவர் யார்?

புனித டொமினிக்

12. செபமாலையில் நாம் தியானிக்கும் மறையுண்மைகள் எவை?

1. கிறிஸ்துவின் பிறப்பு
2. கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு
3. கிறிஸ்துவின் விண்ணேற்பு
4. கிறிஸ்துவின் இறையாட்சிப் பணி

13. செபமாலையில் நாம் தியானிக்கும் மறையுண்மைகள் எத்தனை?

20

14. நாம் தியானிக்கும் மறையுண்மைகளில் கிறிஸ்துவின் இறையாட்சிப் பணியை இணைத்த திருத்தந்தை யார்?

2ம் ஜோண் பவுல்

15. மறையுண்மைகளின் வகைகள் எத்தனை?

4

16. மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளை தியானிக்கும் நாட்கள் எவை?

1. திங்கள், சனி
2. திருவருகைக்கால ஞாயிறு
3. கிறிஸ்து பிறப்பு காலத்தில் வரும் ஞாயிறு தினத்தில்

17. மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளில் தியானிப்பவை எவை?

1. கபிரியேல் தூதர் தேவதாய்க்கு மங்கள வார்த்தை சொன்னது.
2. மாதா எலிசபெத்தம்மாளை சந்தித்தது.
3. இயேசு பிறந்தது.
4. இயேசுவை காணிக்கை கொடுத்தது.
5. காணாமற் போன இயேசுவை கண்டது.

18. துயர் நிறை மறையுண்மைகளை தியானிக்கும் நாட்கள் எவை?

1. செவ்வாய், வெள்ளி
2. தவக்கால ஞாயிறு

19. துயர் நிறை மறையுண்மைகளில் தியானிப்பவை எவை?

1. இயேசு பூங்காவனத்தில் இரத்த வியர்வை சிந்தியது
2. இயேசுவைக் கற்றூணில் கட்டி அடித்தது.
3. இயேசுவுக்கு முள்முடி சூட்டியது.
4. இயேசு சிலுவை சுமந்து சென்றது.
5. இயேசு சிலுவையில் மரித்தது.

20. மகிமை நிறை மறையுண்மைகளில் தியானிக்கும் நாட்கள் எவை?

1. புதன்

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

2. உயிர்ப்பு
3. பொதுக் கால ஞாயிறு

**21.** மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளில் தியானிப்பவை எவை?
1. இயேசு உயிர்த்தெழுந்தது.
2. இயேசு விண்ணுலகிற்கு எடுக்கப்பட்டது.
3. தூய ஆவயின் வருகை.
4. தேவதாயின் விண்ணேற்பு
5. மாதா அரசியாக முடி சூட்டப்பட்டது.

**22.** ஒளி நிறை மறையுண்மைகளில் தியானிக்கும் நாட்கள் எவை?
வியாழக் கிழமை

**23.** ஒளி நிறை மறையுண்மைகளில் தியானிப்பவை எவை?
1. இயேசு திருமுழுக்கு பெற்றது.
2. இயேசு தண்ணீரை இரசமாக்கியது.
3. இயேசு கலிலேயாவில் பணியை தொடங்கியது.
4. இயேசு உரு மாறியது.
5. இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது.

**24.** "அன்னை மரியாவோடு உறவு கொள்ள விரும்புவோருக்கு செபமாலையைத் தவிர வேறு சிறந்த வழி எதுவுமில்லை" எனத் கூறிய திருத்தந்தை?
2ம் ஜோண் பவுல்

**25.** செபமாலையைச் செபிக்கும் முறையைத் தருக.
1. திருச்சிலுவை அடையாளம்.
2. விசுவாசப் பிரமாணம்.
3. இயேசு கற்பித்த செபம்.
4. அருள் நிறை மரியே
5. திரித்துவப் புகழ்
6. ஓ என் இயேசுவே
7. மறையுண்மைகளை தியானித்தல்.
8. காணிக்கைச் செபம்.
9. கிருபை தயாபத்துச் செபம்.
10. மன்றாட்டு மாலை

**26.** செபமாலையைச் செபிக்கும் முறையில் அருள் நிறை மரியே மூன்று தரம் செல்லும் போது ஒவ்வொரு அருள் நிறை மரியேசொல்லும் முன் கூறும் மன்றாட்டு?
1. இறைநம்பிக்கை என்ற புண்ணியத்தில் வளர
2. இறை எதிர்நோக்கு என்ற புண்ணியத்தில் வளர
3. இறை பக்தி என்ற புண்ணியத்தில் வளர

**27.** செபமாலையின் நிறைவில் சொல்லக் கூடிய மன்றாட்டு மலைகள் எவை?
1. இயேசுவின் திரு இருதய மன்றாட்டு மாலை
2. தேவதாயின் மன்றாட்டு மாலை
3. தூய அந்தோனியார் மன்றாட்டு மாலை

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

4. தூய செபஸ்ரியார் மன்றாட்டு மாலை
5. தூய யூதா ததேயு மன்றாட்டு மாலை

**28.** இறந்தோருக்கான நினைவு நாளில் செபிக்கும் முறையைத் தருக.
1. விசுவாச அறிக்கை
2. இயேசு கற்பித்த செபம்.
3. ஓ நல்ல இயேசுவே
4. மரித்த விசுவாசிகளின்
5. முடிவுச் செபம்

**29.** இறந்தோருக்கான நினைவு நாளில் செபிக்கும் போது அருள் நிறை மரியே என்ற செபத்திற்கு பதிலாக சொல்லும் செபம்?
ஓ நல்ல இயேசுவே

**30.** இறந்தோருக்கான நினைவு நாளில் செபிக்கும் போது திரித்துவ புகழ் என்ற செபத்திற்கு பதிலாக சொல்லும் செபம்?
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.
இறந்தோருக்கான நினைவு நாளில் செபிக்கும் போது செபத்தின் இறுதியில் சொல்லும் செபம்?
இயேசு, மரிசூசையே எனது ஆன்மாவையும் உடலையும் உம் திருக்கரத்தில் ஒப்புக் கொடுகின்றேன். இயேசு, மரிசூசையே எனது மரண நேரத்தில் எனக்கு உதவியருளும்.

**31.** இறந்த ஆன்மா இறைவனை அடைய செபம் எழுதுக.
அன்புத் தந்தையே இறைவா, இறந்த ஆன்மாக்களுக்காக உம்மிடம் வருகின்றேன். அவர்கள் இவ்வுலகில் செய்த பாவங்களை மன்னித்து, அவர்களுக்கு நித்திய வாழ்வை அளித்தருள வேண்டும் என்று அறைவா உம்மை மன்றாடுகின்றேன்

## பாடம் - 20
## நவநாட்களும் திருவிழாக்களும்

**1.** உலகம் முழுவதும் திருச்சபை ஒரே நாளில் கொண்டாடும் விழாக்கள் எவைவ?
1. கிறிஸ்மஸ்
2. உயிர்ப்பு

**2.** ஆலயத் திருவிழா கொண்டாடுவதற்கான காரணங்கள்?
1. ஆன்மீக வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்த
2. இறைவார்த்தையினால் வாழ்வை ஊட்டம் பெறச் செய்ய
3. புனிதர்களுக்கு நன்றி கூற
4. புனிதர்களின் வாழ்வைப் பின்பற்றி வாழ
5. தொடர்ந்தும் புனிதர்களின் பரிந்தரையைப் பெற

**3.** கொடிமரம் ஏற்றுவதன் காரணம்?
1. ஆலயத் திருவிழா ஆரம்பிப்பதை தெரியப்படுத்த
2. போதியளவு அருப்பணியாளர்கள் இல்லாத காலத்தில் அருப்பணியாளர்கள் வரும் சந்தர்பத்தில் மக்களின் ஆன்மீக தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்



MRS STELLA NITHLANAYAGAM (B.A(HONS)

என்பதை தெரியப்படுத்தவும்.

**4.** நவநாள் என்ற சொல்லின் அர்த்தம் என்ன?

1. ஒன்பது
2. விசேட வேண்டதலுக்காக நடைபெறும் ஆராதனை

**5.** நவநாள் என்ற சொல் எவ்வாறு தோற்றம் பெற்றது?

"**Novem**" என்ற இலத்தீன் சொல்லில் இருந்தே தோற்றம் பெற்றது.

**6.** நவநாள் ஆரம்பிக்கப்பட்டு 9ம் நாள் இடம் பெறும் விழா யாது?

வெஸ்பஸ்

**7.** நவநாள் ஆரம்பிக்கப்பட்டு 10ம் நாள் இடம் பெறும் விழா யாது?

ஆலயத்திருவழா

**8.** நவநாட்களின் பின்னணியாக அமைந்த விழா எது?

தூய ஆவயின் விழா

**9.** திருவிழாக் காலங்களில் ஆன்மீக வரங்களைப் பெற்றுக் கொள்ள நீர் செய்யக் கூடியது யாது?

1. ஒவ்வொரு நாளும் நவநாட்களில் கங்கு கொள்ள வேண்டும்.
2. தினமும் திருப்பலியில் நற்கருணை பெற வேண்டும்.
3. ஏனைய நாட்களை விட செபத்தில் அதிகமாக ஈடுபட வேண்டும்.
4. திருவிழாத் தினத்தில் திருச்சுருப பவனியில் பக்தியோடு பங்கு கொள்ள வேண்டும்.
5. பங்குப் புனிதரின் முன்மாதிரிகைகளை பின்பற்ற உறுதி எடுத்தல்.

**10.** திருவிழாக் காலங்களில் பங்கு அருட்பணியாளர்களின் பணி யாது?

1. மக்களுக்கு ஆன்மீக ஊட்டத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயல்களுக்கு முதலிடம் கொடுத்தல்.
2. நவநாட்களில் விசேட கருப்பொருளில் இறைவார்த்தையை தியானிப்பதற்குத் துணைபுரிதல்.
3. பங்கின் பெயர் கொண்ட புனிதரின் வாழ்வை தியானிப்பதற்கு ஈடுபடுத்தல்.
4. இக் காலங்களில் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற மக்களை ஊக்கப்படுத்தல்.

**11.** உங்கள் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதர் பற்றிய கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

1. உமது பங்கின் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்ட புனிதரின் பெயர்?

   மரியன்னை
2. அத் திருவிழாவை உங்கள் பங்கில் கொண்டாடும் நாள்?

   ஆவணி 15
3. அவருடைய வாழ்கை பற்றிய தகவல்கள்?
   1. இயேசுவின் தாய்
   2. உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.
4. அவரிடமிருந்து நீர் பெற்றுக் கொள்ளும் மன்மாதிரிகைகள்?
   1. கீழ்ப்படிவு
   2. உதவி செய்தல்

MRS.SELLANTHILANAYAGAM (B.A(HONS)

## பாடம் - 21
## மாலை ஆராதனையும் நற்கருணை ஆசீரும்

1. "என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றியே மகிழ்கின்றது" என்ற பாடலைப்பாடியவர் யார்?
   அன்னை மரியாள்
2. "என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றியே மகிழ்கின்றது" என்ற பாடலுள்ள நற்செய்தி?
   புனித லூக்காஸ்
3. மரியன்னையின் பாடல் எப்போது பாடப்படுகிறது?
   மாலைத் திருப்புகழ் ஆராதனையில்
4. திருப்புகழ் மாலை என்றால் என்ன?
   ஒரு நாளில் குறிப்பிட்ட காலத்தில் விசேடமாக திருப்பாடலை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்ற புகழ்ச்சிக்குரிய செப வழிபாடாகும்.
5. திருப்புகழ்மாலை என்ற பெயர் வரக் காரணம் யாது?
   ஒரு நாளில் குறிப்பிட்ட வேளையில் இது இடம்பெறுவதால்.
6. திருப்புகழ்மாலையை கட்டாயம் செபிக்க வேண்டியவர்கள் யார்?
   குருக்கள், துறவியர்
7. பொது நிலையினர் எப்போது திருப்புகழ்மாலையை செபிப்பர்?
   திருவிழாவுக்கு முதல் நாள்
8. திருவிழாவிற்கு முதல் நாள் வழிபாட்டை எவ்வாறு அழைப்பர்?
   மாலை ஆராதனை – வெஸ்பர்
9. திருப்புகழ்மாலை செபிக்கப்படும் சந்தர்ப்பத்திற்கமைய எவை?
   1. காலைத் திருப்புகழ்
   2. பகல் திருப்புகழ்
   3. மாலைத் திருப்புகழ்
   4. இரவுத் திருப்புகழ்
10. மாலை ஆராதனை ( வெஸ்பர் ) வழிபாட்டு ஒழுங்கமைப்பைத் தருக.
    1. பாடல்களைத தியானித்தல்.
    2. இறைவார்த்தை
    3. மறையுரை
    4. மரியாளின் பாடல்
    5. விசுவாசிகள் மன்றாட்டு
    6. இயேசு கற்பித்த செபம்
    7. நவநாள் செபம்
    8. நற்கருணை ஆசீர்வாதம்
11. நற்கருணை ஆசீர்வாதம் பெறும் பொது நாம் எவ்வாறு அமர்ந்து கொள்ள வேண்டும்?
    முழங்காலில் இருக்க வேண்டும்

MRS.STELLA NITHILANAYAGAM (B.A(HONS)

12. நற்கருணை கதிர் பாத்திரம்ஏற்றி வைக்கப்பட்டுள்ள நேரத்தில் நாம் எவ்வாறு ஆராதனை செய்ய வேண்டும்?

இரு முழங்கால்களையும் மடித்து

13. நற்கருணை ஆசீர்வாதம் பெறும் வேறு சில சந்தர்பங்கள் எவை?

1. மாதத்தின் முதல் வியாழன்
2. நற்கருணை விழா
3. ஞான ஒடுக்கத் தினங்கள்

14. திருப்புகழ்மாலை வழிபாட்டின் போது உம்மால் செய்யக் கூடிய உதவிகள் தருக.

1. ஆராதனை ஒழுங்கமைப்புக்கு உதவுதல்.
2. பங்குத் தந்தையின் பணிகளில் உதவுதல்.
3. ஆலயத்தை அலங்கரிக்க உதவுதல்.
4. ஆராதனையின் போது செபங்களில் பங்கு கொள்ளல்.
5. அடுத்தவருக்கு இடையூறாக இல்லாது இருத்தல்.

15. திருப்புகழ் மாலை ஆராதனை என அழைக்கப்படுவதற்கு காரணம் யாது?

திருவிழாவுக்கு முதல் நாள் மாலையில் இடம்பெறுவதால்.

16. திருப்புகழ் மாலை ஆராதனையில் அதிகமாக எந்த புத்தாகத்திலுள்ள பாடல்கள் பாடப்படகின்றன?

திருப்பாடலில்

17. பொது நிலையினராகிய நாம் திருப்புகழ் மாலை ஆராதனையில் பங்கு பற்றும் சந்தர்பங்கள்?

1. ஆராதனை ஒழுங்கமைப்புக்கு உதவுதல்.
2. பங்குத் தந்தையின் பணிகளில் உதவுதல்.
3. ஆலயத்தை அலங்கரிக்க உதவுதல்.
4. ஆராதனையின் போது செபங்களில் பங்கு கொள்ளல்.

MRS.STELLA NITHLANAYAGAM (B.A(HONS)